Y.M.C.A
சண்டுக்குளி கிளை நூலகம்

Registered as a News Paper

பக்கங்கள் 06 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 16 (02 - 10 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை 227

## வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

குடா நாட்டில் மருந்துப் பொருள்களுக்கு பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது. ஆயிரக்கணக்கான நோயாளிகள் நோய்களைக் குணப்படுத்த முடியாமல் தினசரி அவதியுறுகின்றனர். வருடக்கணக்காக நீடித்து வரும் மருந்துப் பொருள் களுக்கான தட்டுப்பாடு கடந்த இருவாரங்களாக மிகத் தீவிரமடைந்துள்ளது. முக்கிய உயிர்காப்பு மருந்துப் பொருள்களுக்குக் கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனால் நோயால் அவதியுறும் பலநோயாளிகள் மரண அபாயத்தை எதிர் நோக்கும் நிலை உருவாகியுள்ளது. பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத் தின் கீழ் இயங்கிவரும் கிராமிய வைத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பதவியா மினிமுகாம் புலிகளால் தகர்ப்பு

# 20 ஆயுதப்படையினர் பலி: பலர் படுகாயம்



25 09-1992 அன்று பூநகரி பள்ளிக் குடா இராணுவ முகாமின் இரண்டு மினி முகாம்கள் மீதும் 02 காவலரண்கள் மீதும்

### நாவற்குழிப்பகுதியில ஹெலி தாக்குதல்

(வேலணை)

நாவற்குழி குடியிருப்புப் பகுதியை நோக்கி நேற்று முன் தினம் மாலை 6 30 மணியள வில் ஆகாய ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டுக் கொண்டி ருந்த உலங்குவானூர்தி ரேசர் குண்டுத் தாக்குதலை மேற் கொண்டது இதே நேரத்தில் கல்முனைப் பகுதியில் இருந் தும் மண்டைதீவில் இருந்தும் ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன எனினும எவ்வித உயிர்ச் சேதங்களும் ஏற்பட வில்லை எனக் கூறப்படுகின் றது. (14)

### விபத்தில் மரணம்

(யாழ்ப்பணம்)

மினிபஸ்ஸில் இருந்து தவறி வீழ்ந்ததனால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியரான சூ ஜெபரெத்தினம் (வயது20) என்பவரே இவ்வாறு உயிரிழ ந்தவர் ஆவார் ஓடிக்கொண் டிருந்த மினிபஸ்ஸில இருந்து இறங்க முயற்சித்தபோதே இவர் தவறி வீழ்ந்ததாகவும் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரண மானதாகவும் கூறப்படுகின் றது. (22)

## உதவிக்கு வந்த ராணுவம் விரட்டியடிப்பு

[நமது நிருபர்]

பதவியா பராக்கிரமபுரப் பகுதியில் 'கோங்வேவ' மினிமுகாம் மீது நேற்று நள்ளிரவு விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி இம் மினிமுகாமைக் கைப்பற் றினர். முப்பது நிமிட உக்கிர சண்டையின் பின் இம்முகாம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. இதேவேளை, அண்மைய இராணுவ முகாம்களில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத் தினரையும் புலிகள் விரட்டியடித்தனர்.

இச் சண்டையில் ஓர் அதிகாரி உட்பட பதினைந்திற்கு மேற்பட்ட இராணுவத்தின ரும், ஐந்திற்கும் மேற்பட்ட ஊர்காவற் படையினரும் கொல்லப்பட்டனர். பல இராணுவத் தினரும, பல ஊர்காவற்படையினரும் காயமடைந்தனர். இம் முகாமிலிருந்து பெருமளவு இராணுவ தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றினர். இம்மோதலில் புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று நள்ளிரவு 12-00 மணியளவில இத்தாககுதல் விடுதலைப்புலிகளால தொடுக் கப்பட்டது சுமார் 50 இரா ணுவத்தினரும், ஊர்காவற் படையினரும இருநத இநத முகாமை விடுதலைப புலிகள் சுற்றிவளைத்து தாககுதல் நடததினர். அரை மணிததியா லம் இடம்பெற்ற உக்கிரச் சண்டையின் பின் முகாம் புலி களிடம் வீழ்ச்சி கண்டது. இதேவேளை, இச்சண்டையா னது சுமார் ஒன்றரை மணித்தியலங்கள் வரை இடம்பெற்றது. இத்தாக்குத லில் கொல்லப்பட்ட படை யினர் போக பலர் காயங்களு டன் தப்பி ஓடிவிட்டனர்.

இம் மினி முகாமைக் கைப் பற்றிய விடுதலைப் புலிகள் அம் முகாமிலிருந்த சகல இரா ணுவ தளபாடங்களைக் கைப் பற்றிய பின்னர் முகாமை தீ வைத்து முற்றாக எரித்தனர்.


இத் தாக்குதல் இடம்பெற்ற வேளை பதவியாப பகுதாக சுமார் ஒரு மைல் தொலைவி லிருந்த பராக்கிரமபுர இரா ணுவ முகாமிலிருந்து உதவிக்கு வநத இராணுவததினர் சிறிது தூரம் வந்தபோது விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்கு தல் நடத்தி விரட்டியடித்த னர். அவர்கள் முகாமிற்குள்

(6 ஆம் பக்கம் பார்க்க)


## நான்கு வேங்கைகள் வீரச்சாவு











25 09-1992 அன்று பூநகரி பள்ளிக்குடா இராணுவ முகாமின் இரண்டு மினி முகாம்கள் மீதும் 62 காவலரண்கள் மீதும் விடுதலைப் புலிகள் நடாத்திய வெற்றிகரமான தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஒரு தொகுதி.

உயிர்ச் சேதங்களும் ஏற்பட வில்லை எனக் கூறப்படுகின்றது. (14)

## விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

மினிபஸ்ஸில் இருந்து தவறி வீழ்ந்ததனால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியரான சூ ஜெபரெத்தினம் (வயது 20) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார் ஓடிக்கொண்டிருந்த மினிபஸ்ஸில இருந்து இறங்க முயற்சித்தபோதே இவர் தவறி வீழ்ந்ததாகவும் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானதாகவும் கூறப்படுகின்றது. (22)

## வசாவிளானில் மோதல்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான்பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று முன்தினம் இரவு கடும்மோதல் இடம் பெற்றதாகத் தெரிய வருகிறது

(6 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ ... போராளிகள் வீரச்சாவடைந்தனர்.


நேற்று நள்ளிரவு 12-00 மணியளவில் இத்தாக்குதல் விடுதலைப்புலிகளால தொடுக்கப்பட்டது சுமார் 50 இராணுவத்தினரும், ஊர்காவற் படையினரும இருந்த இந்த முகாமை விடுதலைப புலிகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடாத்தினர். அரை மணித்தியாலம் இடம்பெற்ற உக்கிரச் சண்டையின் பின் முகாம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. இதேவேளை, இச்சண்டையானது சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றது. இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினர் போக பலர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

இம் மினி முகாமைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அம் முகாமிலிருந்த சகல இராணுவ தளபாடங்களைக் கைப்பற்றிய பின்னர் முகாமை தீ வைத்து முற்றாக எரித்தனர்.

இத் தாக்குதல் இடம்பெற்ற வேளை பதவியாப பகுதிக சுமார் ஒரு ... லிருந்த பராக்கிரமபுர இராணுவ முகாமிலிருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் சிறிது தூரம் வந்தபோது விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர், அவர்கள் முகாமிற்குள்...

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு வேங்கைகள் வீரச்சாவு



கப்டன் அத்தி



லெப். அரவிந்தன்



லெப். விகடன்



வீரவேங்கை சேரமான்

பதவியா கோங்வேவவில் உள்ள சிறிலங்கா இராணுவ மினி முகாம் மீது நேற்று நள்ளிரவு விடுதலைப் புலிகள் வெற்றிகர தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத் தாக்குதலில் நான்கு விடுதலைப் புலி போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் அத்தி (கணபதிப்பிள்ளை விஜயசேனன், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி) லெப்டினன்ட் அரவிந்தன் (தங்கவேல் ரவிஜெயந்திநகர், கிளிநொச்சி) லெப்டினன்ட் விகடன் (சாமிநாதன் இலங்கநாதன் கள்ளப்பாடு, முல்லைத்தீவு) வீரவேங்கை சேரமான் (சிவராசா சிவரூபன் 4ஆம் கண்டம் கற்சிலைமடு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு) ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### டில்லி போய்ச் சேர்ந்த

# சிறிலங்கா ஜனாதிபதிக்கு ராஜாங்க மரியாதை

(டில்லி)

புதுடில்லிக்கு நேற்றுக் காலை போய்ச் சேர்ந்த சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும், ஹேமா பிரேமதாசாவிற்கும் இராஜாங்க மரியாதைகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர்தயாளசர்மா ஜனாதிபதி மாளிகையில் சிறிலங்கா ஜனாதிபதியையும் அவரது பாரியாரையும் வரவேற்றார். வைபவ ரீதியான வரவேற்பு நிகழ்ச்சி அங்கு இடம்பெற்றது. சிறிலங்கா ஜனாதிபதியை கௌரவிக்கும் வகையில் 21 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

புதுடில்லியிலுள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு சிறிலங்கா ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் போய்ச் சேர்ந்ததும் அவர்கள் அரசபவனியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சென்னை விமான நிலையத்தில்

# பிரேமாவை சந்திக்க ஜெயலலிதா செல்லவில்லை

(சென்னை)

ஜனாதிபதி ஆர் பிரேமதாசா புதுடில்லி செல்லும் வழியில் நேற்றுக் காலை சென்னை வந்தார்

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தமிழக அரசு உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் அவரை விமானத்திற்குள் வைத்து வரவேற்றனர். அவர் பிரயாணம் செய்த விமானம் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 45 நிமிடங்கள் தங்கி நின்றது ஜனாதிபதி ஆர் பிரேமதாசா விமா

[6 ஆம் பக்கம் பார்க்க]

### மன்னார் மாவட்டத்தில்

# இரண்டாவது நாளாக இராணுவ நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் இரண்டாவதுநாளாகநேற்றும் ராணுவ நடவடிக்கை தொடர்வதாக இராணுவ பேச்சாளர் கேணல் சரத முனசிங்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத் தகவலை வெளியிட்ட இவர், நேற்று அதிகாலை இந் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகியதாக தெரிவித்தார்.

ரி - 55 ரகதாங்கிகள், விமானங்களின் உதவியுடன் படையினர் தாக்குதல் நடாத்துவதாகவும் மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து ஊரடங்கு அமுலில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வடமராட்சிக் கடலில்

# 3 மீனவரைக் காணவில்லை

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கடற்பிராந்தியத்தின் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமையால் இப் பகுதி மீனவர்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இதனால் இப்பகுதிக்கடல் பிரதேசத்தில் மீன் பிடி நடவடிக்கைகள்பாதிப்படைந்துள்ளன. கடந்த புதன் கிழமை பருத்தித்துறைக் கடலில் மீன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

பதவியா கோங்வேவ இராணுவ மினிமுகாம் மீது நேற்று புலிகள் நடாத்திய வெற்றிகர தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| | — | 02 |
| ★ ரி - 81 எல். எம். ஜீ | — | 01 |
| ★ ஏ கே. எல் எம் ஜீ | — | 03 |
| ★ ரி - 81 - 1 ரக துப்பாக்கி | — | 07 |
| ★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — | 03 |
| ★ ரி - 56 - 1 ரக துப்பாக்கி | — | 05 |
| ★ ரி - 56 புதிய ரக துப்பாக்கி | — | 07 |
| ★ சொட்கண் | — | 01 |
| ★ சிக்னல் பிஸ்டல் | — | 01 |
| ★ தொலைத்தொடர்புசாதனம் | — | 08 |
| ★ ரி-81 எல். எம் ஜீ ரம் மகசின் | — | 01 |
| ★ ஏ கே எல் எம். ஜீ ரம்மகசின் | — | 15 |
| ★ ரி - 81 மகசின் | — | 75 |
| ★ ரி - 56 மகசின் | — | 16269 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 18 |
| ★ நே டோ ரவைகள் | — | 05 |
| ★ ரி - 81 பைனட் | — | 28 |
| ★ ஏ. கே. காஸ் ரவைகள் | | |

| | | |
|---|---|---|
| | — | 10 |
| ★ ரி - 81 கைக்குண்டு | — | 15 |
| ★ 60 மி. மீ. எறிகணை | — | 19 |
| ★ 60மி மீ பராலைட் எறிகணை | — | 06 |
| ★ ஜே. ஆர் கைக்குண்டு | — | 27 |
| ★ எம். 73 கைக்குண்டு | — | 02 |
| ★ பெரிய குண்டு | — | 03 |
| ★ 40 எம். எம். ஷெல் | — | 01 |
| ★ 60 எம். எம். ஸ்கோப் | — | 01 |
| ★ 69 ஆர். பி ஜீ. ஸ்கோப் | — | 55 |
| ★ ஜி பி. எம். ஜி லிங் | — | 01 |
| ★ 60 எம் எம். போஸ்ட் | — | 01 |
| ★ குரோஸ் (அண்டனா) | — | 02 |
| ★ வயர் ரோல் | — | 18 |
| ★ தலைக்கவசம் | — | 14 |
| ★ சிக்னல் பிஸ்டல் காட்ரஜ் | — | 01 |
| ★ சாஜ்ஜர் பற்றி | — | 22 |
| ★ றெயின் கோட் | — | 23 |
| ★ தண்ணீர் கான் | — | 12 |
| ★ தண்ணீர் கோல்சர் | — | 20 |
| ★ தொப்பி | — | 15 |
| ★ பரட் தொப்பி | — | 28 |
| ★ ஏ கே. கோல்சர் | — | 68 |
| ★ சப்பாத்து (சோடி) | — | 35 |
| ★ கிட்பாக் | — | 11 |
| ★ மில்ரீ பெல்ட் | | |

உங்கள் அபிமானத்தைப் பெற்ற
மக்கள் தினசரி
**ஈழநாதம்**
விளம்பரப் பணிமனை
வடமராட்சி மக்கள் நலன் கருதி நெல்லியடியில் இயங்குகிறது.
தொடர்புகளுக்கு:
**நவீன களஞ்சியம்**
(மொடேர்ண் ஸ்ரோர்ஸ்)
நெல்லியடிச் சந்தி, கரவெட்டி.

## வரி விளம்பரம்

### யாழோசையின் இசைவகுப்புகள்

புல்லாங்குழல், வயலின், ஓகன், கிற்றார் ஆகிய பாடங்கள் 05-10-1992 விஜய தசமி அன்று (திங்கள்) மாலை 4.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தொடர்பு:- "யாழோசை" 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (3282)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5079)

### "நீமியா உரம்"

நீமியா உரம் பாவனையால் நைதரசன் விரயம் தடுக்கப்படுகிறது. அடிக்கட்டு உரம் கரைந்தோ நீராவியாகவோ விரயமாவதில்லை. விளைச்சல் அதிகரிக்கிறது. கிலோ பக்கற் விலை-- ரூ. 15/-மட்டுமே 20 கிலோ பக்கற் விலை ரூ. 260/-மட்டுமே. அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. "மில்க்வைற்" (சி-5145)


### சுதந்திரக் கட்சிக் கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டம் மீண்டும் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டம் ஒக்டோபர் மாதம் நடைபெறுவதாக இருந்தது என்றும்,

கட்சிக்குள் நிலவும் அதிகாரப் போட்டி காரணமாக ஒத்திப் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒக்டோபர் 14 இல்

## பல்கலை. நிர்வாகிகள் அடையாளவேலைநிறுத்தம்

பல்கலைக் கழக மானியக் குழு நிர்வாக உத்தியோகத்தர்களும் மற்றும் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர்களும் ஒக்டோபர் 14 ஆம் திகதி அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள உள்ளனர். அவர்களது கோரிக்கையில் சம்பள உயர்வும் ஒன்றாகும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இடம் பெற்ற பேச்சு வார்த்தைகள் பயன் தராததால் தாம் தொழில் சங்க நடவடிக்கையில் இறங்க முடிவெடுத்திருப்பதாக நிர்வாக உத்தியோகத்தர் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

1983 முதல் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு ஊழியர் நம்பிக்கை நிதி நன்மைகள் வழங்கப்படவில்லை என்றும், பதவி உயர்வுகள் தொடர்பாகவும் உத்தியோகத்தர்களுக்கும் நிர்வாகத்துக்கும் முரண்பாடுகள் நிலவி வருவதாகவும் சொல்லப்படுகிறது.

இதேவேளை நாடு பூராகவும் உள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 2,700 விரிவுரையாளரும் ஒக்டோபர் 29 இல் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி 30 வீகிதத்தால் அதிகரித்துள்ள போதிலும் அதற்கேற்றவாறு பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு வசதிகள் செய்து தரப்படவில்லை என்று பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஒன்றியத் தலைவர் நளின் டி. சில்வா தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒன்றியம் முன்வைத்த ஆறு கோரிக்கைகளையும் பேச்சு வார்த்தைகளின் போது உயர் கல்வி அமைச்சும் மானியக் குழுவும் நிராகரித்ததை அடுத்தே பல்கலைக்கழக ஆசிரியர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளார்கள்.

சம்பள உயர்வு பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஒன்றியத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும்.

### இன்ரக் கழகம் உதவி

இளவாலை மாதகல் ஆகிய பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு யாழ். மத்திய கல்லூரி "இன்ரக் கழகம்" உடுபுடைவைகளைச்சேகரித்து மானிப்பாய் கிராமசேவகர் அலுவலகத்தின் ஊடாக வழங்கியுள்ளது.

## புலிகளைத் தடைசெய்யும் சாத்தியமில்லையாம்

(காட்மண்டு)

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கானசாத்தியப்பாடுகளை சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா நிராகரித்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது

நேபாளத்திற்கு விஜயம் மேற்கொண்ட இவர் கொழும்புக்குப் புறப்படுவதற்கு முன்னர் காட்மண்டுவில் உள்ள பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் செயலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இந்திய நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்

விடுதலைப்புலிகளைத்தடை செய்யவேண்டுமென இலங்கையில் கோரிக்கை எதுவும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதில் நாங்கள் நீண்ட தூரம் வந்துவிட்டோம் நாம் தீர்வொன்றை அண்மித்துக் கொண்டிருக்கிறோம் என்றும், இலங்கையில் முன்னர் சுமார் பத்து தீவிரவாத இயக்கங்கள் இருந்தன. இப்போது விடுதலைப் புலிகள் மாத்திரமே இருக்கின்றனர் என்றும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

ஐந்து பிரதேச செயலகங்கள்

## 1993 ஜனவரி மாதத்தில் முழுமையாக இயங்கும்

1993 ஜனவரி மாதத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்கள் முழு அதிகாரங்களுடன் செயற்படவுள்ளன.

உடுவில், நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேசங்களுக்கான செயலகங்கள் முழு அதிகாரங்களுடன் இயங்குவதற்கு வசதியாக மேற்படி செயலக அலுவலகங்களுக்கு ஒவ்வொரு கணக்காளர்களை யாழ்ப்பாணம் செயலகம் நியமித்துள்ளது கணக்குப் பதிவுகள், சம்பள வேலைகளை மட்டும் மேற்கொண்டு வரும் இச்செயலகங்கள் 1993 ஜனவரி மாதத்தில் இருந்து திட்டமிடல் வேலைகள், ஓய்வூதிய வேலைகள் அடையாள அட்டைகள் விநியோகம் பதிவாளர் வேலைகள் போன்ற வேலைகளையும் மேற்கொள்ள விருக்கின்றன யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வரும் பதினான்கு செயலகங்களில் இவ்வைந்து செயலகங்களுக்கும் முழு வேலைகளும் பன்முகப்படுத்தப்படுவதைத் தொடர்ந்து ஏனைய செயலகங்களுக்கும் அவை விஸ்தரிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (42)

மணலாற்றுப் பிரதேச

## சிங்கள குடியேற்றங்களுக்கு மேலும் வசதி அளிக்கப்படும்

"அமைச்சர் லொக்கு பண்டார

மகாவலி 'எல்' வலயத்தின் கீழேவரும் மணலாற்றுப் பகுதியில் குடியேறியுள்ள சிங்களவர்களுக்கு மேலும் பல வசதிகள் அளிக்கப்படும் என்று அமைச்சர் லொக்கு பண்டார கூறியுள்ளார்.

அண்மையில் இப்பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் லொக்கு பண்டார அங்கு நான்குலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடமொன்றைத் திறந்து வைத்ததுடன், முப்பது பெண்களுக்கான தைக் கிங்களையும் முப்பது சுகாதார சேவைத் தொண்டர்களுக்கு அன்பளிப்பாக கையளித்தார். அத்துடன் இப்பகுதியில் வாழும் ஆசிரியர்களுக்கு தொண்டர் ஆசிரியர் நியமனமும் வழங்கினார்.

மேலும் இங்கு குடியேறியிருப்போருக்கு பசுமாடு மற்றும் கால்நடை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பாராளுமன்றக் குழுக்கூட்டத்தின்போது இப்பகுதியின் அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுப்பது பற்றி பேசுவேன் என்றும் உறுதியளித்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ்

## தொழிற்சங்க சட்டங்கள் அரசாங்கத்தால் வாபஸ்

(கொழும்பு)

அவசரகால சட்டப் பிரமாணங்களின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்டங்கள் கடந்த செவ்வாய் நள்ளிரவு முதல் விலக்கிக் கொள்ளப்பட்டு இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தச் சட்டம் கடந்த மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. இந்தச் சட்டங்களின் மூலம் சட்டபூர்வமாக தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்ததும், எதிர்க்கட்சிகள், தொழிற் சங்கங்கள், சர்வதேச தொழிலாளர் சங்கங்கள் என்பன எதிர்த்து வந்தன என்பதும் தெரிந்ததே.

## இந்திய பல்கலை. பயில்வோர் பதிவு செய்ய கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களில் தற்போது தங்களது செலவிலே கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள், அனுமதி கிடைத்துள்ள மாணவர்கள் பற்றிய விபரங்களை உயர் கல்வி அமைச்சு அவர்களின் பெற்றோர்களிடம் கோரியுள்ளது.

அங்குள்ள பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவரின் பெயர், வயது, முகவரி, கல்வித் தகைமை, படிக்கும் பாடங்கள் போன்ற விபரங்களை ஒக்டோபர் 12ஆம் திகதிக்கு முன்னர் உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


### அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பருத்தித்துறைப் பிரிவு 30-09-92-ல் நடாத்திய அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு பிரதேச செயலர் திரு சி. முருகேசபிள்ளை, பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு ச. செல்லத்துரை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வி. தில்லைநாதன், தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் திரு க பரமானந்தம், வர்த்தக சங்கத் தலைவர் திரு. பொ இரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

1-ம் பரிசு - 2548
2-ம் பரிசு - 1564
3-ம் பரிசு - 4773
4-ம் பரிசு - 4943
5-ம் பரிசு - 4782

கௌரவ செயலாளர்.
பருத்தித்துறைப் பிரிவு

(3300)

### G. A. Q 1993 - 94

பேராதனை பல்கலைக்கழகம்

★ இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ A / L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம் :

3 - 10 - 92 8.00 மணி

விபரங்கள் நேர அட்டவணை என்பவற்றை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி
எஸ். அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பணம். (சி-5128)

### SHORT - TERM COUNSELING TRAINING PROGRAM

★ Conducted by The Association for Health & Counseling begins on Sunday October 4, 1992 at 9.00 A. M. at Thodarpaham, 657/1, Hospital Road, Jaffna.

★ Only those who have applied will be admitted for the inaugural lectures

என்றும் உங்களுக்காக........

## கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டம் மீண்டும் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டம் ஒக்டோபர் மாதம் நடைபெறுவதாக இருந்தது என்றும்,

கட்சிக்குள் நிலவும் அதிகாரப் போட்டி காரணமாக ஒத்திப் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதற்கானசாத்தியப்பாடுகளை சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா நிராகரித்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது.

நேபாளத்திற்கு விஜயம்மேற்கொண்ட இவர் கொழும்புக்குப் புறப்படுவதற்கு முன்னர் காட்மண்டுவில் உள்ள பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் செயலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இந்திய நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்

யில் கோரிக்கை எதுவும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதில் நாங்கள் நீண்ட தூரம் வந்துவிட்டோம் நாம் தீர்வொன்றை அண்மித்துக் கொண்டிருக்கிறோம் என்றும், இலங்கையில் முன்னர் சுமார் பத்து தீவிரவாத இயக்கங்கள் இருந்தன. இப்போது விடுதலைப் புலிகள் மாத்திரமே இருக்கின்றனர் என்றும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ்

## தொழிற்சங்க சட்டங்கள் அரசாங்கத்தால் வாபஸ்

(கொழும்பு)

அவசரகால சட்டப் பிரமாணங்களின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்டங்கள் கடந்த செவ்வாய் நள்ளிரவு முதல் விலக்கிக் கொள்ளப்பட்டு இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தச் சட்டம் கடந்த மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. இந்தச் சட்டங்களின் மூலம் சட்டபூர்வமாக தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்ததும், எதிர்க்கட்சிகள், தொழிற் சங்கங்கள், சர்வதேச தொழிலாளர் சங்கங்கள் என்பன எதிர்த்து வந்தன என்பதும் தெரிந்ததே.


# என்றும் உங்களுக்காக.........
# எங்கள் சேவை.........

தரமான அதி நவீன ஆடைத் தினுசுகளில்

## ரெடிமேட் வகைகள்

## ○பெண்கள் ○சிறுவர்கள் ○குழந்தைகள்

எல்லா வகையினருக்குமான

உத்தரவாதம் மிக்க ஆடைகள்

## மொத்த சில்லறை விற்பனர்கள்

# கணேசன் தையல் நிலையம்

தாவடி வடக்கு, கொக்குவில்

(சி-5140)



...த்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம் :

**3 - 10 - 92 8.00 மணி**

விபரங்கள் நேர அட்டவணை என்பவற்றை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

எஸ். அருள்நங்கை

புதிய உயர்கல்லூரி,

ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பணம். (சி-5128)


## SHORT - TERM COUNSELING TRAINING PROGRAM

★ Conducted by The Association for Health & Counseling begins on Sunday October 4, 1992 at 9.00 A. M. at Thodarpaham, 657/1, Hospital Road, Jaffna.

★ Only those who have applied will be admitted for the inaugural lectures.

★ A screening of candidates will take place at a mutually agreed date and time.

★ Those who do not attend the inaugural lectures will not be admitted into the training program.

Thank You

The Executive Director.

''Shanthiyagam'',
15, Kachcheri Nallur Road, Jaffna. (3290)

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 10 - 02

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

★ மகே (மகேந்திரன் - மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு திருக்கோணமலை சாம்பல்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

கெங்கா (ஆனந்தராஜா சுந்தரராஜா - கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலை 4-ம் கட்டைப் பகுதியில் சிங்களக் காடையர்களினால் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு யாழ். சிறுப்பிட்டிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான (பல்கலைக்கழக மாணவன்) -

நந்தன்

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - புதுக்குடியிருப்புக்கும், தாழங்குடாவிற்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5148)

அன்றைய நாள் தமிழீழத்திற்கு துயரம் தரும் நாளாய் விடிந்தது அன்று காலைதான் ராஜன் எம்மை விட்டுப் பிரிந்தான்.

முதல் நாள்மாலை பண்டத்தரிப்பில் நின்ற போராளிகளைப்பார்க்கவந்த ராஜனிடம், எதிரியின் சிறிய படையணி ஒன்றின் மீதான சிறிய தாக்குதல் திட்டம் ஒன்றைக் கூறினார் கோபியும் தோழர்களும்.

எதிரியின் புதிய நில ஆக்கிரமிப்புக் கண்டுகுமுறிக்கொண்டிருந்த ராஜன், உடனடியாக ஒப்புதல் தந்துவிட, சிறியதாய்த் திட்டமிடப்பட்டிருந்த அந்தத் தாக்குதலுக்கான ஒழுங்குகள் இரவோடிரவாக நடந்து முடிந்தன.

திட்டம் மிகவும் சிறியதாகவும் சுலபமானதாகவும் எதிர்பார்க்கப்பட்டதால், திட்டம் பற்றி அதில் நின்றவர்களைத் தவிர வேறு எவருக்குமே எதுவுமே தெரியாது போய்விட்டது.

திட்டத்தின் வெற்றி பற்றிய வோக்கிச் செய்தியை எதிர்பார்த்தபடி காத்திருந்தான் ராஜன்.

கிளைமோர் சத்தம் கேட்டவுடன் கோபி கோபி... என்று கூப்பிட்டும் தொடர்பில்லாமல் போக,

'ராஜன் வழமையான ராஜனாய்' மாறிப்போனான். தலையில் காயத்துடன் கோபியைக் கண்டதும் அவன் வழமையான ராஜனாய் மாறிப்போனான்.

என்னநடந்ததோ? இரவு கிளைமோர் வைத்தவர்கள் கவனமின்றி நிற்க எதிரி கண்டானோ? இல்லை எம்மவர் ஏதேனும் வோக்கியில் மாறிக் கதைத்து விட்டனரோ? வேவு பார்த்தோர் தவறோ? வேறு பிழைகளோ?

கோபியின் அணியைச் சூழ்ந்து எதிரிகள் தனி ஆளாய் உள்ளே புகுந்த ராஜன் எல்லோரையும் பின்னுக்கு அனுப்பிநின்று அடிபட்டு... அவன் வரவில்லை.

கணேஸ், கிங்ஸ்லி என்று எட்டுப்பேருடன் ஒன்பதாவது ஆளாய் ராஜனும் வரவில்லை.

ராஜன் இல்லை என்ற செய்தி மெல்லப்பரவ அதிர்ந்து துடித்தது தமிழீழம்.

அவன்மீது கொள்ளை அன்பைவைத்திருந்த தலைவர், உயிராய்ப் பழகிய நண்பர்கள், அவனால் உருவான போராளிகள் அவனைக்காத்த மக்கள் என்று தமிழீழம் அழுது துடித்தது.

ராஜன்-ரோமியோ நவம்பர். எங்கள் போராளிகளின் மனதில் நிறைந்து விட்ட இனிய புயல். இறுகிய பாறை.


அடிக்கடி ரவைகளால் தைக்கப்பட்டு, பிய்ப்பட்டு, ரத்தம் கொட்டி, தழும்புகளால் நிறைந்த தேசம்.

அவனது மனம்மட்டும் தளரவில்லை; அது இறுகிய பாறையாய் உருவாகியிருந்தது.

1987இன் ஆரம்பஆண்டுஓர் இருண்ட பொழுது. யாழ். பொலிஸ் விடுதியும், தொலைத் தொடர்புக் கட்டடமும் கோட்டைக்குத் துணையாய் நிமிர்ந்து நின்றன.

அதை நோக்கி இருளோடு இருளாய்
நகரும் புலி வீரர்கள்.
அதில் ஒருவனாய் ராஜன்
தன்கை ஆயுதத்தைத் தான் பார்க்க
முடியாத காரிருள்.
பின்னால் நிற்பவரின் மூச்சுச்சுடும்
தாகம் தணிக்க உயிர்கொடுக்கத்
தயங்காத வேகம், உறுதி.
இது எம் தாயகம். எங்கள் பூமி.
இங்கு அந்நியனுக்கும் என்ன வேலை?
இன்று வெல்வோம்.
அந்நியன் பாடம் படிப்பான்.

அக்காலத்தில் அவன் காரைநகர் கடற்படைக்காவலரண் பொறுப்பாளன். அதற்கு முந்தைய சண்டையிலெல்லாம் தன் முத்திரையை ஆழமாய்ப் பதித்திருந்தான். கிட்டண்ணை அவனைக் கவனித்து வைத்திருந்தார். இந்தச் சண்டைக்கென ராஜன் கிட்டண்ணையால் விசேடமாக அழைக்கப்பட்டிருந்தான்.




ராதா அண்ணை தலைமையில் உள் நுழைந்த குழுவில் ராஜனும்,

உள்நுழைவோருக்கு குறுகியதாயும் வெளியில் நிற்போருக்கு நீண்டதாயும் அமைந்த இரவு விடிந்தபோது ..

தனது படை வீரர்களை ''யாழ்ப்பாணக் காடுகளில்'' தேடிக் கொண்டிருந்தது சிறிலங்கா அரசு.

யாழ்ப்பாணத்தில் காடுகளைத் தேடிக் கொண்டிருந்தது உலகு.

தன் நண்பர்கள் சிலரையும் தன் கை விரல்கள் இரண்டையும் இழந்த பின், மருத்துவ மனையில் இருந்து அந்தச்சண்டையில் தனது அனுபவத்தை மீட்டுக் கொண்டிருந்தான் ராஜன்.

இந்திய இராணுவக் காலம் அந்த இரும்பை உருக்காக உருவாக்கிய நாட்கள்,

இந்தியக் காலத்தில் ராஜனின் நாட்கள் வீரம் செறிந்த நாட்கள். அவன் நின்று பிடித்தது வெறும் அதிர்ஷ்டத்தினால் மட்டுமல்ல, வீரம், விவேகம், அவதானம், அன்புக்கினிய எம்மக்களின் பாசம்— இவைதான் அவனைக் காப்பாற்றிய கவசங்கள் தொடர்ச்சியான முற்றுகைகள்— தொடர்ந்து தூக்கமற்ற இரவுகள்.

முற்றுகை ஒன்றிலிருந்து பாய்ந்தோடித்தப்பி வந்த நாளின் மறுநாட் காலை, ஒரு வாரக் கசகசப்பு தீரக்குளித்துவிட்டு நொண்டிக் கொண்டு வந்தான். அன்புத் தோழனின் மடியில் ஈரம் ஊறிய காலை முள்ளெடுக்கக் கொடுத்துவிட்டு இருந்தவன் அப்படியேதூங்கிப்போனான் பாவம்.

உறுதியாய், தன்னம்பிக்கையுடன் சக போராளிகளை இலகு நிலையில் வைத்திருக்கும் நகைச்சுவையுடன்.

இந்தியச் சண்டையின் ஆரம்ப நாட்கள். எமது பொன்னாலைப் பனை வெளிகள் ஊடாக அந்நியப் பாதங்கள். அனுபவம் குறைந்த எமது வீரன் ஒருவனிடம் இயந்திரத் துப்பாக்கி அவனது சூடுகள் உயர்ந்து மேலாய் மிக மேலாய் வீணாகிப் போயின. இதைக் கண்ட ராஜன் ''டேய் தம்பி ஆமி இன்னமும் பனையிலை ஏறேல்லை. கொண்டா ஜி பி. எம் ஜி. யை'' ஆயுதம் கைமாற அந்நியர் தறிகெட்டு ஓடுகிறார்கள். அந்தச் சண்டையும் ராஜனின் தொடையில் ஆழமாய் ஓர் சூட்டுத் தழும்பினைப் பதித்து வைக்கிறது.

பொன்னாலையில் கால் கிழிந்து, இந்தியாவில் காயம் ஒழுங்காக மாற முதல், நாட்டுக்கு என்று துடிதுடித்துப் புறப்பட்டு, மீன்பிடிப்படகில் தீவுக்கு வந்து, இங்காலே வந்தால், எங்கும் இந்தியத் தலைகள், தடங்கள்.

''எங்கட ஆட்கள் எங்கே'' என்று எல்லாச் சனத்தையும் கேட்டுத்திரிந்து சந்தித்தான்.

யாழ்ப்பாணத்தில் எங்கும் இராணுவ முகாம்கள் நிறைந்திருந்த காலத்தில் ராஜன் வந்து சேர்ந்ததும், இந்தியர்கள் பிரச்சினையை வேறு விதமாகச் சந்தித்தார்கள். அவனது உறுதி இந்தியர்களைத் திணறவைத்தது.

அரைத்தூக்கம் கலையாத அதிகாலைப்பொழுது ஊரில் உள்ள நாய்கள் எல்லாம் குரைக்கத் தொடங்க, உடலில் உள்ள இரத்தம் எல்லாம் ஒன்றாகி சூடாகிப்பாயும்.

''டேய் தும்பன், வெற்றி, எழும்புங்கோடா!''

''ரங்கன்''

''அண்ணை நான் முழிப்புத்தான்.''

''வெளிக்கிடுங்கோ...''

சிரிப்புத்தான் வரும். என்னத்தை வெளிக்கிடுவது? ஜீன்ஸ் போட்டபடி, கோல்சர் கட்டியபடி வெறும் நிலத்தில் படுக்கை, தலைமாட்டில் ஆயுதம் வைக்கவென விரித்திருக்கும் சாரத்தை எடுத்துச் சுருட்டி இடுப்பில் கட்டினால் சரி.

''சரி வெளிக்கிட்டாச்சு.''

முன்படலை பிசகென்று பின் வேலியால்பாயகாலில் நெருஞ்சி குத்தும். முந்த நாள் வாங்கிய செருப்பு நேற்றைய ரவுண்டப்பில் தவறிப் போனது நினைவுக்கு வரும்.

விரைவாய் சத்தமின்றி, சத்தமின்றி விரைவாய் அல்லது உள்ளே, ரவுண்டப்புக்கு உள்ளே.

ராஜன் அருகில் இருந்தால் அனைவருக்கும் நம்பிக்கை - எப்படியும் ரவுண்டப்பை உடைக்கலாம்.

''கட்டாயம் உடைக்கலாம், ஒருத்தரும் பயப்படாதேங்கோ''

''டேய் தும்பன் நீ முன்னுக்குப்போய் எத்தனை வாகனம் நிற்குதெண்டுபார். கண்டிட்டான் எண்டால் அடியாமல் வராத''

''ரங்கனும் வெற்றியும் அங்காலபோய் அடுத்த சந்தியைப் பாருங்கோ டேய் ரங்கன் ஜி. 3 ரவுண்ஸ் தட்டுப்பாடு சும்மா அடிக்காதை''


''தம்பி நீங்கள் என்ன கிறனைட்டோ வைத்திருக்கிறியள். பயப்படாதேங்கோ. என்னோடை நில்லுங்கோ. நான் சொல்லேக்கை கிறனைட் அடிக்கவேணும்.''

''அம்மா எல்லோரும் இதில குவிஞ்சு நிண்டால் தான் கட்டாயம் காணுவான். நீங்கள் பிள்ளையளை கூட்டிக் கொண்டு உள்ளுக்குப் போங்கோ, இந்தாங்கோ கோப்பையையும் கொண்டு போங்கோ''.

கொஞ்ச நேரத்தின் பின் கேட்கும் வெடிச் சத்தங்கள் ஓயும் போது, தேத்தண்ணீர் கொடுத்த அம்மா ''ஆர் பெத்த பிள்ளையோ முருகா காப்பாத்து'' என வேண்டிக் கொண்டிருக்கும் போது,

இரண்டு றோட்டுக் கடந்து நின்று வரும் ஆட்களிடம் சைக்கிள் கேட்டுக் கொண்டிருப்பார்கள் ராஜனும் அவனின் ஆட்களும்.

கிறனைட்டுடன் வந்த சின்னப்பெடியன் ''ராஜண்ணை நான் உண்மையாய்ப் பயந்திட்டன், இனிப்பயப்படமாட்டன். நான் அடிச்ச கிறனைட்டில ஆமி செத்திருப்பானோ?'' என்று கேட்டுக் கொண்டிருப்பான்.



## லெப். கேணல் ராஜன்

அவர்களின் அநேகமான நாட்கள் இப்படித்தான் விடியும்.

இன்னொரு காலை வேளை, படுத்திருந்த வீட்டுஒழுங்கையால் தெருவுக்குவர முன்னால் இராணுவ அணி மற்றவர்கள் காணமுதல் ராஜன் கண்டு விட்டான். இன்னும் ... கூடாக்கான்

பக்கத்தாலை வாருங்கோ'' இராணுவம் நிற்கும் செய்தியை அலாதியாய்ச் சொல்வதுடன், அந்தக் கணத்திலேயே திட்டமும். தாக்குதலும் எத்தகு சூழ்நிலைகள் மத்தியிலும் ஆபத்தை எதிர்கொள்ளக் கொஞ்சமும் தயங்காத செயலுறுதி- பல கட்டங்களில் ராஜன் சாவின் விளிம்பில் ஏறி நடந்து வந்துள்ளான்.

எமது மண்ணில் அந்நியன் சுதந்திரமாய்த் திரிவதா? நிம்மதியாய் வாழ்வதா? என்று குமுறுவான். அவன் அடிக்கடி கூறும் வார்த்தைகள் ''மச்சான் உவங்களை இப்படியே விடக்கூடாது. இண்டைக்கு ரெண்டு ஆமியையெண்டாலும் கொல்லவேணும்''

ஒருநாள் பண்டத்தரிப்பு முகாம் ''என்ன வெடிச் சத்தம்?'' என இந்தியர்கள் சனத்தை விசாரித்துக் கொண்டிருக்கையில் ராஜனும் தும்பனும் தங்கள் பிஸ்டலை இடுப்பில் வைத்த பின்னர் இறந்த ராணுவத்தின் துப்பாக்கிகளை ஆளுக்கொன்றாய் எடுத்தபடி சைக்கிளில் ..

சுழிபுரம் சந்தி முகாம் அருகே இந்திய இராணுவம் ஜீப்புடன் செத்தபடி கிடக்க ..

எம்போராளி காசிமை இழந்த பின்னர், நடுநெஞ்சில் துப்பாக்கி துளைத்த ராஜனைத் தூக்கிக் கொண்டு வந்தனர். தும்பனுடன் நதலனும் நித்தியும்.

இந்திய அடிவருடிகள் முகாமிட்டிருந்த சுன்னாகம் இருபுறமும் இராணுவக் காவல் அதனுள்ளே கும்மாளமிட்டனர். எம்மினத்தின் அவமானச் சின்னங்கள். திட்டமிட்டபெரிய தாக்குதல். அதிகஆட்கள் முதல்நாள் றோட்டுக்கடக்க முடியாமல் ஒத்திவைத்த தாக்குதல். அடுத்தநாள் முயற்சி செய்த போது

இரவு ரோந்து இராணுவத்தை எதிர்கொள்ள, எல்லாமே பாழ்

ராஜனை இருட்டுக்குள்ளால் இழுத்து வந்து குப்பியைக கழட்ட, வந்தது நூல் மட்டுமே

''மச்சான் சுபாஸ் பிறண் அடிகொழுவியிட்டுது எனக்குப்பெரிய காயம்—இந்த முறை சரிவராது— எல்லாரும் சாகாமல் இவர்கள் ரெண்டு பேரையும் கொண்டு போங்கோ''

சொன்னவன் பின்னர் கரைச்சல் தராமல் மயங்கிப் போனான்.

''ஐயோ ராஜண்ணை...'' என்று சூட்டும், ரங்கனுமாய் வாய்க்குள் விரலைவிட்டுத் தோண்டி.

தேங்காய் எண்ணை பருக்கி, தேங்காய் உடைத்து பால் பிழிந்து பருக்கி.

காரில் வைத்து ஸ்ராட் இல்லை என்று கத்திதேடி வேலிவெட்டி பாதை செய்து தள்ளுதள்ளு என்று. தள்ளிக் கொண்டுபோய், உள் ஒழுங்கை வீட்டில் வைத்து, நீர்வேலிச்சனத்தைக் காவலுக்கு விட்டு,

அந்தநாள் விட்டு அடுத்த நாள்வாதரவத்தைக்குப் போய்ச்சேர ராஜனும் முரளியும் மயக்கம் தெளிய, லோலோ மயங்கப்போய், பின்னர்போய் விட்டான்... எம்மைவிட்டுப் போயே விட்டான் ..

அவனது தோழர்களது இழப்புக்கள் ஒவ்வொன்றின் போதும், அவன் அமைதியாய்க் குமுறுவான். கண்கள் வெறிக்க அவன் பாறையாய் இறுகுவான்.

ராஜனது இளமைக்கால நண்பன் தெய்வா, பாடசாலைக் காலத்திலிருந்து ஒன்றாய் கடலுக்கு தொழிலுக்குப்போய் வந்து , படித்து பந்து விளையாடி .., இயக்கத்திற்கு வந்து ,ஒரேபடகில் இந்

ராஜன்-ரோமியோ நவம்பர். எங்கள் போராளிகளின் மனதில் நிறைந்து விட்ட இனிய புயல். இறுகிய பாறை.

அடிக்கடி ரவைகளால் தைக்கப்பட்டு, பிய்ப்பட்டு, ரத்தம் கொட்டி, தழும்புகளால் நிறைந்த தேசம்.

அவனது மனம்மட்டும் தளரவில்லை; அது இறுகிய பாறையாய் உருவாகியிருந்தது.

1987இன் ஆரம்பஆண்டுஓர்இருண்ட பொழுது. யாழ். பொலிஸ் விடுதியும், தொலைத் தொடர்புக் கட்டடமும் கோட்டைக்குத் துணையாய் நிமிர்ந்து நின்றன.

அதை நோக்கி இருளோடு இருளாய்
நகரும் புலி வீரர்கள்.
அதில் ஒருவனாய் ராஜன்
தன்கை ஆயுதத்தைத் தான் பார்க்க
முடியாத காரிருள்.
பின்னால் நிற்பவரின் மூச்சுச்சுடும்
வியர்வையால் குளிக்கும் தேகம்.
தாகம் தண்ணீருக்காய் மட்டுமல்ல
அதற்கும் மேலாய், உயர்வாய்.

... மனையில் இருந்து அந்தச்சண்டையில் தனது அனுபவத்தை மீட்டுக் கொண்டிருந்தான் ராஜன்.

இந்திய இராணுவக் காலம் அந்த இரும்பை உருக்காக உருவாக்கிய நாட்கள்,

இந்தியக் காலத்தில் ராஜனின் நாட்கள் வீரம் செறிந்த நாட்கள். அவன் நின்று பிடித்தது வெறும் அதிர்ஷ்டத்தினால் மட்டுமல்ல, வீரம், விவேகம், அவதானம், அன்புக்கினிய எம்மக்களின் பாசம்— இவைதான் அவனைக் காப்பாற்றிய கவசங்கள் தொடர்ச்சியான முற்றுகைகள்— தொடர்ந்து தூக்கமற்ற இரவுகள்.

முற்றுகை ஒன்றிலிருந்து பாய்ந்தோடித்தப்பி வந்த நாளின் மறுநாட் காலை, ஒரு வாரக் கசகசப்பு தீரக்குளித்துவிட்டு நொண்டிக் கொண்டு வந்தான். அன்புத் தோழனின் மடியில் ஈரம்ஊறிய காலை முள்ளெடுக்கக் கொடுத்துவிட்டு இருந்தவன் அப்படியேதூங்கிப்போனான் பாவம்.

எத்தகு நெருக்கடிகள் மத்தியிலும் உறுதி தளராத இரும்பு மனம், அதிகம் பேசாதவன். போர்க்களத்தில் பேசுவான்

முகாம்கள் நிறைந்திருந்த காலத்தில் ராஜன் வந்து சேர்ந்ததும், இந்தியர்கள் பிரச்சினையை வேறு விதமாகச் சந்தித்தார்கள். அவனது உறுதி இந்தியர்களைத் திணறவைத்தது.

அரைத்தூக்கம் கலையாத அதிகாலைப்பொழுது ஊரில் உள்ள நாய்கள் எல்லாம் குரைக்கத் தொடங்க, உடலில் உள்ள இரத்தம் எல்லாம் ஒன்றாகி சூடாகிப்பாயும்.

''டேய் தும்பன், வெற்றி, எழும்புங் கோடா!''

''ரங்கன்''

''அண்ணை நான் முழிப்புத்தான்.''

''வெளிக்கிடுங்கோ...''

சிரிப்புத்தான் வரும். என்னத்தை வெளிக்கிடுவது? ஜீன்ஸ் போட்டபடி, கோல்சர் கட்டியபடி வெறும் நிலத்தில் படுக்கை, தலைமாட்டில் ஆயுதம் வைக்க வென விரித்திருக்கும் சாரத்தை எடுத்துச் சுருட்டி இடுப்பில் கட்டினால் சரி.

''சரி வெளிக்கிட்டாச்சு.''

நாய்கள் குரைக்கும் சத்தம் நகர-நகர, அது இராணுவத்தின் நகர்வை நிழலாய்க் காட்டும்.



## லெப். கேணல் ராஜன்

அவர்களின் அநேகமான நாட்கள் இப்படித்தான் விடியும்.

இன்னொரு காலை வேளை, படுத்திருந்த வீட்டுஒழுங்கையால் தெருவுக்குவர முன்னால் இராணுவ அணி மற்றவர்கள் காணமுதல் ராஜன் கண்டு விட்டான். ,'இண்டைக்குப் பொழுது சூடாத்தான் விடிஞ்சிருக்கு நான்இதில வைச்சுத்தொடங்கிறன்.நீங்கள் இரண்டுபேரும் மற்றுப்

சூட்டும், ரங்கனுமாய் வாய்க்குள் விரலைவிட்டுத் தோண்டி.

தேங்காய் எண்ணை பருக்கி, தேங்காய் உடைத்து பால் பிழிந்து பருக்கி.

காரில் வைத்து ஸ்ராட் இல்லை என்று கத்திதேடி வேலிவெட்டி பாதை செய்து தள்ளுதள்ளு என்று. தள்ளிக் கொண்டுபோய், உள் ஒழுங்கை வீட்டில் வைத்து, நீர்வேலிச்சனத்தைக் காவலுக்கு விட்டு,

அந்தநாள் விட்டு அடுத்த நாள்வாத ரவத்தைக்குப் போய்ச்சேர ராஜனும் முரளியும் மயக்கம் தெளிய,லோலோ மயங்கப்போய், பின்னர்போய் விட்டான்... எம்மைவிட்டுப் போயே விட்டான் ..

அவனது தோழர்களது இழப்புக்கள் ஒவ்வொன்றின் போதும், அவன் அமைதியாய்க் குமுறுவான். கண்கள் வெறிக்க அவன் பாறையாய் இறுகுவான்.

ராஜனது இளமைக்கால நண்பன் தெய்வா, பாடசாலைக் காலத்திலிருந்து ஒன்றாய் கடலுக்கு தொழிலுக்குப்போய் வந்து , படித்துபந்து விளையாடி .., இயக்கத்திற்கு வந்து ,ஒரேபடகில் இந்தியா போய்...,கூமாப்பிட்டி பயிற்சிமுகா

(5ஆம் பக்கம் பார்க்க)

# சிவநாயகமும் - "சாத்தானின் படையும்"

''சாத்தானின் செய்யுள்கள்'' (Satanic Verses) எழுதியதற்காக சால்மன் ருஷ்ரி ஆயதுல்லா கொமெய்னியின் மரணத் தீர்ப்பிற்கு இலக்கானார். இன்றும் அவர் லண்டனில் உயிருக்குப் பயந்தே வாழ வேண்டியிருக்கிறது. சாத்தானின் செய்யுள்கள் போல சர்ச்சைக்கும் பரபரப்பிற்கும் உள்ளாகாத போதிலும் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட ''சாத்தானின் படை'' (Satanic Force) என்ற நூலின் பெயராலும், ஒரு தமிழ்ப் பத்திரிகையாளர் இந்தியாவில் ஒரு வருடகாலம் விசாரணைகளின்றிச் சிறை வைக்கப்பட்டிருந்தார். அவர்தான் 62 வயதான சுப்பிரமணியம் சிவநாயகம். யூலை 91 இல் தமிழ்நாட்டில் சிவநாயகம் கைது செய்யப்பட்டார். சாத்தானின் படைக்கும் அவரிற்கும் தொடர்புகள் இருப்பதால் அவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. விசாரணைகளின்றி ஒரு வருட காலம் சிறைவைக்கப்பட்டிருந்த அவரை இந்திய அரசு சமீபத்தில் விடுதலை செய்தது.

சாத்தானின்படை மொத்தமான இரு பகுதிகளை உடைய ஒரு தொகுப்பு. வியட்நாம் போர் பற்றி இந்தியக் காட்டூணிஸ்ற் அபு ஏபிரகாம் தொகுத்து வெளியிட்ட வியட்நாம் மீது தீர்ப்பு (Verdicts on Vietnam) என்ற கார்ட்டூண்களின் தொகுப்பு நூலைப் போன்றது நூலின் ஆரம்பப் பக்கங்களில் அணிவகுத்துச் செல்லும் ஐ.பி.கே. எவ் அணியொன்றின் புகைப்படம் காணப்படுகிறது. அதற்குக் கீழ் ஆர்சனே தார்க்கோவ்ஸ்கியின் பின்வரும் வாசகம் காணப்படுகிறது: ''விதி எமது வழியைப் பின்தொடர்கிறது. கையில் சவரக் கத்தியை வைத்துக்கொண்டிருக்கும் ஒரு பைத்தியக்காரனைப் போல'' நூல். ஐ. பி. கே. எவ் பற்றி, இந்திய வெளிநாட்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வந்த கட்டுரைகள், காட்டூண்களின் தொகுப்பாயுள்ளது. ஈழத்துக் கவிஞர்களினதும் சில சிங்களக் கவிஞர்களினதும் கவிதைகள் இதில் உண்டு. ஈழத்து தமிழ்நாட்டு ஓவியர்களின் வரைவுகளும் உண்டு. மேலும் போராளிகளின் மரணங்கள் பற்றியும் வீரம்பற்றியும் கூறுமிடங்களில் பழந்தமிழ் இலக்கியப் பாடல்கள் வருகின்றன. இவற்றோடு முக்கியமாக ஐ. பி கே. எவ் இனால் கொல்லப்பட்டவர்களின் புகைப்படங்களும், பிற விபரங்களும் இது சம்பந்தப்பட்ட சத்தியக் கடுதாசிகளும் காணப்படுகின்றன. ஐ. பி. கே. எவ் இனால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் பற்றிய விபரங்களும் சில சமயங்களில் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களும், சம்பந்தப்பட்ட பெண்களே எழுதிய கடிதங்களும், வாக்கு மூலகங்களும் காணப்படுகின்றன. இவையெல்லாம் அதிர்ச்சியூட்டும் ஓவியங்களின் பின்னணியில் சொல்லப்படுகின்றன. இவ்வளவும்தான். இவையனைத்தும் வாசிப்பவரின் இரக்கத்தையும் நீதியின் பாற்பட்ட ஆத்திரத்தையும் கோரி நிற்கும் பயங்கரமான புகைப்படங்களின் பின்னணியில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இது இந்தியர்களை மிகவும் அவமானப்படுத்துகிறது. இதில் புலிகளின் முன்னுரையையும் சில புகைப்படங்களையும் தவிர, புலிகளின் இலட்சியவாசகங்களோ அல்லது நேரடியான பிரசாரங்களோ, கண்டனங்களோ அநேகமாகத் தவிர்க்கப்பட்டுள்ளன. தொகுப்பு என்ற வகையில் இதுஒரு அற்புதமான செயல் இந்தியர்கள் முன்னெப்பொழுதும் வேறுயாரிடமும் பெற்றிராத ஒரு புது அனுபவம்.

இந்த வடிவமைப்பு. தொகுக்கப்பட்டிருக்கும் - விதம் Lay out- இதுதான் சிவநாயகத்தின் கைவண்ணமோ என்ற சந்தேகத்தை எழுப்புவதாக அவரைப் பற்றித் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். நூல், முதல்பதிப்பு லண்டனில்வெளியிடப்பட்டது. இரண்டாவது பதிப்பு இந்தியாவில் வெளியிடப்பட இருந்தது. அச்சக வேலைகள் நடந்து கொண்டிருந்த நேரத்தில் அச்சகத்தின் மீது தமிழகப் பொலிஸ் பாய்ந்தது. அச்சடிக்கப்பட்டிருந்த லட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமதி மிக்க பிரதிகள் சகலதும் பறிமுதல் செய்யப்பட்டன, சிவநாயகம் கைது செய்யப்பட்டார்.

தனது நண்பர்களால் சிவா என்றழைக்கப்படும் சிவநாயகம் 'சற்றடே றிவியூ', 'தமிழ் நேசன்' ஆகிய பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியர். 'ஈழம் என்பது மக்களின் சித்தம்' (Eelam is a state of mind) என்று எழுதியவர். ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பாளராக இருந்தார். பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு மிகவும் முரண்பட்டார். கூட்டணித் தலைமைப் பீடத்தை சிவநாயகம் கடுமையாகச்சாடி எழுதுவார். பதிலுக்குப் கூட்டணிப் பிரமுகர் திரு கா. பொ. ரத்தினம் சற்றடே றிவியூவை ''சனி நோக்கு'' என்று சாடினார். கொழும்பு மையத்திலிருந்து வந்த ஆங்கிலப் பத்திரிகைகள் தமிழரிற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்துத் தொடர்ச்சியாகச் சூதான மௌனம் சாதித்தபோது, தமிழர் மையத்திலிருந்து ஓர் ஆங்கிலப் பத்திரிகை வரவேண்டியதன் கட்டாயத்தைப் பற்றிச் சிந்தித்த ரீ ஆர். ஆர். ஓ. வைச் சேர்ந்த கந்தசாமி,

**நிலாந்தன்**

இது விசயத்தில் அவரைப் போலவே சிந்தித்த சிவநாயகத்தை ஆசிரியராகக் கொண்டு சற்றடே றிவியூவை 1982இல் ஆரம்பித்தார். அந்த நேரம் கொழும்பில் தான் வகித்த சொகுசான அதிகம் உழைப்பைக் கோராத பதவியைத் துறந்துவிட்டு, சிவநாயகம் சற்றடே றிவியூவின் ஆசிரியரானார். இதில் தான் சந்திக்கப்போகும் ஆபத்துக்கள் குறித்து அவரிற்கு முன்கூட்டியே நன்கு தெரிந்திருந்தது என்று அவருடைய நண்பரும் சற்றடே றிவியூவின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவருமான திரு. ஏ. ஜே. கனகரட்ணா கூறுகிறார்.

கடந்த ஆண்டு 'ஈழநாதம்' தனது முதலாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியபோது அதில் உரையாற்றிய ஏ.ஜே கனகரட்ணா சற்றடே றிவியூ பற்றியும் சிவநாயகம் பற்றியும் பின்வருமாறு கூறினார்; ''எங்களுடைய பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதில் யாராவது தனியொரு பத்திரிகையாளரின் பங்கு பற்றிக் கூற முடியுமா என்று கேட்டால், அங்கு சிவநாயகத்தைப் பற்றித்தான் கூறவேண்டியிருக்கும். சிவநாயகத்தையும் சற்றடே றிவியூவையும் பிரித்துப் பார்க்க முடியாது.''

சற்றடே றிவியூ ஜே. ஆர். ஆட்சியின் கண்களை உறுத்தத் தொடங்கியது. சிவநாயகத்தின் இலக்கம் 66, சம்பல் தெருவிலுள்ள அலுவலகத்தைத் தேடிப் புலனாய்வுத் துறையினர் வரத் தொடங்கினார்கள். 83இன வன்முறைக்குச் சிறிது முன்பாக சற்றடே றிவியூ தடை செய்யப்பட்டது. சிவநாயகத்தை கொழும்பு வருமாறு புலனாய்வுத் துறை அழைத்தது. ஆனால் சிவநாயகம் இவ்வழைப்பை நிராகரித்தார். பதிலாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார். அங்கு தமிழர் தகவல் மையத்தில் (Tamil Information Centre) சேர்ந்தியங்கினார். இச்சந்தர்ப்பத்தில் அவரை லண்டனிற்கு வரும்படி கந்தசாமி அழைத்தார் என்றும் ஆனால், அந்நியமான ஒரு கலாசாரச் சூழலில் தன்னைப் பொருத்திக் கொள்வது சிரமம் என்று சிவா மறுத்துவிட்டார் என்றும் ஏ. ஜே. கனகரட்ணா கூறுகிறார்.

சிவநாயகத்தைக் கைது செய்த இந்தியர்கள் தெளிவான காரணங்கள் எதையும் தரவில்லை என்று கூறப்படுகிறது. சாத்தானின் படைக்கும் அவரிற்குமுள்ள தொடர்பு குறித்தும் சொல்லப்பட்ட போதிலும், அவர் மீது விசாரணைகள் எவையும் நடக்கவில்லை என்று கூறப்படுகிறது நீரிழிவு, எக்ஸிமா. கண் வெண்படலம் போன்ற கலவையான நோய்களால் தாக்கப்பட்ட சிவநாயகம் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அப்பொழுதும் அவருடைய கைவிலங்குகள் அகற்றப்படவில்லை. அவருடைய மனைவி அவரைப் பார்க்கப் போனபோது விலங்கிடப்பட்ட நிலையில், மிகவும் துவண்டு போய் நடக்கவும் முடியாமலிருந்த அவரை, அவரது பக்கத்துக் கட்டிலிலிருந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் வந்து தூக்கிக் கொண்டு காட்டியதாகக் கூறப்படுகிறது. அவரை விடுவிக்கும் முயற்சியில் இந்துப் பத்திரிகையின் ராம் உட்பட, வேறு பலரும் முயற்சித்தார்கள். எனினும் எல்லாருடைய வேண்டுகோள்களையும் புதுடில்லி நிராகரித்தது. இது ஓர் அரசியல் விவகாரம் இதில் ஒருவரும் தலையிட வேண்டாம் என்று அங்கு கூறப்பட்டதாம். இப்பொழுது சிவநாயகம் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். ஒரு வருடகாலத் தடுப்புக்காவல் உத்தரவுப்படியே அவர் கைது செய்யப்பட்டதாகவும் இவ்வாண்டு யூலையோடு மேற்படி உத்தரவு காலாவதியாகி விட்டதாலும், இவ்வுத்தரவு மேலும் நீடிக்கபபடவில்லை என்பதாலும் சிவநாயகம் விடுவிக்கபபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் அவர் தற்சமயம் சென்னை மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கபபட்டுள்ளதாகவும் தமிழ்நேசன் கூறுகிறது.

சிவநாயகம் ஏன் கைது செய்யப்பட்டார்? எந்தச் சட்டத்தின் கீழ் அவர் விசாரணைகளின்றி ஒருவருட காலம் தடுத்து வைக்கப்பட்டார்? ஏன் விசாரணைகள் இன்றி விடுவிக்கப் பட்டார்? போன்ற கேள்விகளுக்கு இந்தியர்கள் என்ன பதில் சொலலப் போகிறார்களோ தெரியாது. ஆனால் சாத்தானின் படை இந்தியர்களை ஆத்திரப்படுத்திவிட்டது என்பது தெளிவானது. ஏ ஜே. கனகரட்ணா சிவநாயகத்தை ''இந்திய நீதிபரிபாலன முறையின் அநீதிக்குப் பலியானவர்'' என்று கூறுகிறார். மேற்படி தலைப்பில் ஹொட்ஸ்பிரிங்கில் (15 யூலை 92) அவர் எழுதிய குறிபபொன்று பின்வருமாறு முடிகிறது: ''இந்தியாவின் கண்களுக்கு சிவநாயகம் செய்த 'குறறம்' என்னவெனில், அவர் எமது சுதந்திரத்துக்காக சந்தேகத்திற்கு இடமின்றிப் போராடியதும் ''ஈழம் என்ற மக்களின் சித்தத்தை'' யதார்த்தமாக மாற்றப் பாடுபட்டதும்தான்'

சிவநாயகம் அரசியலில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# நிவாரணம்

**நா. மனோன்மணி**

விடிந்தது வெகுநேரமாகியும்படுக்கையிலே சுருண்டு கிடந்த வேணி ஓலைக்குடிசையின் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு தலையை மெல்ல உயர்த்திப் பார்த்தாள்.

அவசரமாக உள்ளே தாய் வருவதைக் கண்டவள் படுத்தவாறே, தாயைக் கவனித்தாள்.

''ம் அம்மா இந்தஇரண்டு வருடத்திலே நல்லா மெலிஞ்சு தலையெல்லாம் நரைச்சு எப்போதும் கவலையும், கண்ணீரும்தான். அவவின்ர இப்போதைய கவலை என்னைப் பற்றித்தானே.''

''வேணி... வேணி. எழும்பு பிள்ளை உப்பிடியே படுத்துக் கிடந்தால் என்ன நடக்கப் போகுது. எங்கட தலைவிதியை நாங்கள் அனுபவிக்கத்தானே வேணும்''

சொல்லியவாறே மூலையில் கிடந்த பையொன்றை கையிலெடுத்துக் கொண்டு வெளியே போக ஆயத்தமானவள்,

''உங்கை ஏதோ நிவாரணம் குடுக்கப் போறாங்களாம். ஒருக்காப் போய் பார்த்துக் கொண்டு வாறன். எழும்பி அலுவலைப் பார்'' சொல்லியவாறே வெளியேறினாள்.

மெல்ல படுக்கையில் எழுந்தமர்ந்த வேணி தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். சின்னஞ் சிறு ஓலைக் குடிசை இரண்டு மூன்று மண்சட்டி பானைகள் ஒரு குடம் ஐந்தாறு சிறிய அலுமினியச் சட்டிகள் ஓலைப் பெட்டிகள் சிலது இதுதான் அந்தக் குடிசையின் சொத்துக்கள் பிறந்த மண்ணை விட்டு அகதிகள் என்ற பெயரோடு இடம் விட்டு இடம் மாறித் திரியும் எங்களைப் போலவுள்ள ஏழைகளிடம் இதைவிடவேறென்னஇருக்கும்''சசப் போடு சிரித்துக்கொண்டாள். ஊரோட இருந்த காலத்தில இருந்த கொஞ்சத் தோட்டத்தோட குத்தகைக்கும் வேற காணிகளையும் எடுத்துதோட்டச் செய்கையிலே முழுமனதோடு ஈடுபட்டு நிம்மதியாகத்தான் இருந்தது அவளின்ர குடும்பம்.

கடும் உழைப்பாளியான தகப்பன் கந்தசாமியைநினைக்கும்போதே அவளின் கண்கள் குளமாகியது.

அருமையாகப்பெற்றஇரண்டு ஆண் பிள்ளைகளுக்குப் பிறகு மூன்றாவதாகப் பிறந்தவள் வேணி. அமைதிகாக்க வந்த அரக்கப் படையினால் அநியாயமாகச் சாகடிக்கப்பட்டான் மூத்தவன் கருணா. அந்த அதிர்ச்சியில் இருந்து மீளும் முன்னாலே அடுத்தவன் சுரேஸ் விடுதலைப்பாதையில் விடிவு தேடிச் சென்று விட்டான்.

''அடிமையாய் சாகிறதை விட அடிபட்டுச்சாவதேமேல்''

இதுதான் சுரேஸ் கடைசியாய் எழுதிவைத்த வார்த்தைகள்.

ஒன்றின் மேல் ஒன்றாக ஏற்பட்ட துன்பங்களினால் நிலைகுலைந்து குடும்பம் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் இனவாதம் தமிழினத்தை இடம் பெயர வைத்து வேடிக்கைபார்க்க ஆரம்பித்தது.

ஒரு நாள் நள்ளிரவிலே வீடு வாசலைவிட்டு உடுத்த உடையோடு ஓடிவந்தவர்கள். இந்தச் சிறு குடிசையை அமைத்து சீவியத்தை நடத்த ஆரம்பித்தார்கள் துயரங்களும் துன்பங்களுந்தான் அவர்கள் சொத்தாகியது. இடைக்கிடை கிடைக்கும் நிவாரணச் சாமான்கள்தான்அவர்களுக்கு வயிற்றுப் பாட்டுக்கு நிவாரணமாகியது ஆனால்! கொதிக்கும் மனதுக்கும்குமுறுகின்ற நினைவுகளுக்கும் எது நிவாரணம்!

இரண்டுமாதங்களுக்குப்பின்னர் தங்கள் வீடுகளைப் பார்த்து வருவதற்காக சென்ற கந்தசாமியும் இன்னும் சிலரும் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி மாண்ட செய்தியை தப்பி வந்த ஒருவர் சொன்னபோது தாயும் மகளும் வேரற்ற மரங்களாக வீழ்ந்த துன்பத்திற்கு ஆறுதல் யார் சொல்வது

பகலும் இரவும் அந்தக் குடிசைக்குள்ளேயே அமர்ந்திருந்து கண்ணீர் வடிக்கவும் கவலைப்படவும் வேணியால் முடிந்தது ஆனால்!

தாயான கனகமோ தான் இழந்தவற்றை நினைத்துப் பொருமுவதோடு, இருப்பவளின் எதிர்காலத்தையும்- இரண்டு பேரின் வயிற்றுப் பாட்டையும் எண்ணி துயரத்தோடுதன் வாழ் நாட்களை கழித்துக் கொண்டிருக்கிறாள்

தன் நினைவோட்டத்தை மெல்ல நிறுத்திவிட்டு வாசலுக்கு வந்தாள் வேணி.

பக்கத்து குடிசையில் செல்லப்பர் உரத்தகுரலில் மனைவியிடம் சொன்னார்.

''இஞ்சரப்பாஉந்தப்பையை எடு நான போய் உந்த நிவாரணச் சாமான்களை எடுத்துக் கொண்டு வாறன்''

''ஓம் அவன்கள் எங்களை இல்லிடமில்லாமல் துரத்திப் போட்டு இப்ப நிவாரணம் எண்ட பெயரில பிச்சை போடுறாங்கள். நாங்களும் வெக்கமில்லாமல் அதைநம்பிச் சீவிக்கிறம்''

''என்ன பவளம் உப்பிடிச் சொல்லுறாய் அவங்கள் தாறதையும் வேண்டாமெண்டு சொல்லிப் போட்டு எப்பிடிச் சீவிக்கிறது விசர்க் கதையல்லோ கதைக்கிறாய்.''

''நீங்கள் என்ன சொன்னாலும் சரி எங்கட சனத்துக்கு இன்னும் உணர்வுவரவில்லை. பாதிச்சனம் தப்பினால்போதுமெண்டு இந்தியாவுக்கு ஓடிச்சுது. கொஞ்சப்பேர் இதுதான் சாட்டெண்டு கொழும்பிலையும் வெளிநாட்டுக்கும் போய் அங்க அகதி நிவாரணம் வாங்குதுகள். எங்களைப் போல ஏழையள் இங்க கிடக்கிறம்.''

பவளம் மாமி ஆத்திரத்தோடு பேசினாள். செல்லப்பர் பகிடியாகச் சொன்னார்.

''சரியப்பா நான் ஒருக்கா போட்டுவாறன் பிறகு வந்து உன்ர ஞாயத்தை கேட்கிறனப்பா''

செல்லப்பர் பாதையை நோக்கி நடப்பதை பார்த்தவாறு நின்ற வேணி குடத்தில் நீரில்லாததை கவனித்துவிட்டு குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றை நோக்கிநடந்தாள்.

அந்த தோட்டத்தில் குடியிருக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்கள் அனைத்துக்கும் குடிதண்ணீருக்கும் குளிப்பதற்கும் ஒரு கிணறுதான் இருக்கிறது. அதனால் கிணற்றடியில் எப்பேதும் ஆட்கள்தான். வெளிநாட்டுக்குப் போன யாரோ ஒரு வெளிநாட்டு அகதியின் தோட்டத்தில் உள்நாட்டு அகதித் தமிழினம் ஏங்கிநிற்கிறது. எதிர்காலம் எங்கேயென்று!

கிணற்றடியில் யாரோகுளிப்பதைக் கண்ட வேணி குடத்தை நிலத்தில் வைத்துவிட்டு சரிந்து கிடந்த மரமொன்றின் மீது அமர்ந்தாள்.

தந்தையின் மறைவுக்குப்பின் வேணி யாரோடும்கதைப்பது மிகக்குறைவு. ஏதாவது கேட்டால் அதற்கு மாத்திரம் தான் பதில் கிடைக்கும். அதனால் யாருமே தேவையில்லாமல் அவளோடு கதைப்பதில்லை.

''பாவம் நல்ல பிள்ளை தகப்பன் செத்ததோட அதின்ரை கதைபேச்சுக் கூட குறைஞ்சு போச்சு''

அங்கிருக்கும் அனைவரும் அவள்மீது பரிதாபப் படுவது உண்டு. ஆனால் எல்லோருமே ஒவ்வொரு வகையில் பரிதாபத்துக்குரியவர்கள் தான்.

காலையில் பவளம் மாமி சொன்னதில் உள்ள உண்மைகள் நெஞ்சில் சுழன்றது. வேணி சிந்திக்க ஆரம்பித்தாள்.

இராணுவம் செய்த கொடுமைக்கெல்லாம் இப்பத் தாற நிவாரணம் தான் பரிகாரமா! உரிமை வேணுமெண்டு கேட்டால் துப்பாக்கியை தூக்கிறதும், உயிர்களை கொல்லுறதும் எங்கட மண்ணையே ஆக்கிரமிச்சு எங்களை அகதியாக்கிறதும் தான் நீதியா!

வேணியின்நெஞ்சம் கொதித்தது.

அப்பாவை இழந்து தவிப்பதற்கு அம்பதுனாயிரம் காசு தான் நிவாரணமா?

சொந்த மண்ணைவிட்டு அகதியாக ஓடி வந்ததுக்கு இந்த அரிசியும் மாவுதான் நிவாரணமா?

இந்த மண்ணைக் காக்கிறதுக்காக ஆயிரக்கணக்கிலே தியாகம் செய்த மாவீரர்களுக்கும் அந்தக் குடும்பங்களுக்கும் எது நிவாரணம்!

அவள் கண்களிலே செவ்வண்ணக் கொடியொன்று சிறகடித்துபறக்கஆரம்பித்தது:

# தமிழர் ஒடுக்கி வைத்துள்ள அவர் தம் பண்பாட்டம்சம் ஒன்று

**- மு. திருநாவுக்கரசு**

பறை அறையும் கலைஞர் ஒருவரை மதன் கண்டெழுதிய பேட்டி கடந்த வெள்ளி மஞ்சரியில் வெளியாகி இருந்தது. அக்கலைஞரைக் கண்ட பேட்டி என்னை மிகவும் கவர்ந்தது. அப்பேட்டியாற் தூண்டப்பட்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

தமிழ் மக்கள் மத்தியிலிருந்து அருகிச் செல்லும் இத்தோல் வாத்திய இசைக் கருவிக்கு ஒரு வரலாற்று முக்கியத்துமும், பண்பாட்டு முக்கியத்துவமும் உண்டு. திராவிடப் பண்பாட்டின் ஆதியைக் குறிக்கும் இவ்விசைக்கருவி தமிழப் பண்பாட்டு கருவூலங்களில் ஒன்றாகும் ஆனால் ''ஆரிய'' கலாசாரத்தின் தாக்கத்தால் தமிழ்ப் பண்பாடு ''சயன்கிறட்டைஸ்ட்'' எனப்படும் திரிபுக்கு உட்படலாயிற்று இதனை ஒருவகை மேல்நிலைப் படுத்தல எனக் தமிழர் கருதிக்கொள்ளலாயினர்.

குறிப்பாக ஆலயக் கிரியைகளோடு சம்பந்தப்பட்டு இந்த மாற்றம் அதிகம் நிகழ்ந்தது. இதனால் ஆலயங்களில் பறை இசைக்கப்படுவது படிப்படியாகக் கைவிடப்பட்டு தவில் இசைக்கப்படலாயிற்று. குறிப்பாக நகர்ப்புறங்களை அண்டி உயர்குழாத்தினரை மையமாகக் கொண்ட பெரும் கோவில்களிலேயே இம்மாற்றம் பெரிதும் ஏற்படலாயிற்று.

ஆனால் இதேவிடயம் சிங்கள மக்கள் பக்கத்தில் வேறுவிதமாய் அமைந்தது.கி.மு. 1000 ஆண்டளவில் இலங்கைத்தீவில் பெருங்கற் பண்பாடு எனப்படும் திராவிடப் பண்பாடே இருந்துள்ளது. சிங்கள மக்களினதும் மூலப்பண்பாடு இதுவேயாகும் தமிழ் மக்கள் பக்கம் ஏற்பட்டதையும்விட சிங்கள மக்கள் மத்தியில் 'ஆரிய'' கலாசார தாக்கம் குறைவாக ஏற்பட்டதனால் பறை எனும் இசைக் கருவியை அவர்கள் கைவிடாது சற்று திருத்தத்துடன் அரசவை இசைக்கருவியாகப் பேணிக் கொண்டனர். சிங்களவர்களது கண்டிய நடனத்தில் இவ்விசைக் கருவியே உபயோகத்தில் உண்டு. எனவே சிங்கள மக்கள் மத்தியில் பறை மேன்மைக்குரிய கருவியாக அரசவை அந்தஸ்தைப் பெற்று தொடர்ந்து நிலவ தமிழ் மக்கள் மத்தியில் அது பெரிதும் கைவிடப்படும் ஒன்றாகவும் தாழ்வுக்குரிய ஒன்றாகவும், கருதப்படலாயிற்று.

ஆரம்பகாலத்தில் தமிழரது வழிபாட்டோடும், மங்களகரமான நிகழ்ச்சிகளோடு பறை சம்பந்தப்பட்டதொன்றாகவே இருந்தது இன்றும் பல கிராமிய கோயில்களில் பறைதொடர்ந்தும்இசைக்கப்படுவது இதற்கு ஒரு நல்ல சான்றாகும் இவ்விசைக்கருவி மங்களகரமான நிகழ்வுகளிலிருந்து நீக்கப்பட்டு அமங்கலமான மரணக்கிரியைகளுக்கே பெரிதும் உரியது என்ற நிலை உருவானது. இந்த விடயத்தில் திராவிடப் பண்பாட்டுக்கருவூலம் ஒன்றினைத் தமிழரைவிடச் சிங்களவர் அதிகம் பேணுகின்றனர் எனலாம்.

பறை இசைக்கும் கலைஞர்கள் ஒரு தனிச் சமூகமாக ஒடுக்கப்பட்ட சமூகமாக வாழ்கின்றனர். உண்மையில் ''ஆரிய'' கலாசாரத் தாக்கம் தமிழ்ச் சமூகத்தைப் பண்பாட்டுரீதியாக ஒடுக்கிய தன் சின்னமே இதுவாகும். பறை இசைக்கும் கலைஞர் சமூகமே தமிழர் மத்தியில் திராவிடப் பண்பாட்டை அதிகம் பேணும் மக்களாவர் மானிடவியல் ஆய்வுகளைச் சரிவரச் செய்தால் இதனை உணர்ந்து கொள்ளலாம் என நம்புகிறேன்.

பறை இசைக்கும் கலைஞர்கள் தவிர்ந்த ஏனைய கலைஞர்கள் காலத்திற்குக் காலம் இந்தியாவிலிருந்து இங்கு தருவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பறை இசைக்கும் கலைஞர்கள் அவ்வாறன்றி இத்தீவின் மூலவேருடன் தொடர்ந்து கிளைவிடுபவர்களாவர். ஆதலினால் கலப்பற்றதிராவிடப் பண்பாட்டம் சங்கள் இவர்களிடமேபெரிதும் தரித்தும் உயிர்வாழக் கூடியதாகவும் உள்ளது.

தமிழ் மக்களின் மூலப் பண்பாட்டுக் கூறுகளை அறிய எம்மத்தியில் உள்ள உயிர்வாழும் தரவுகளாக பறை இசைக்கும் கலைஞர் சமூகம் உள்ளது. இச்சமூகத்தவர் மத்தியிற் செய்யப்படும் ஆழமான மானிடவியல் ஆய்வுகள் தமிழரின் ஆதிப்பண்பாட்டுக் கோலங்களைத் தெளிவாக அடையாளம் காண உதவக்கூடியவை

தமிழ்ச் சமூகம் தனது மேன்மைக்குரிய பண்பாட்டம்சம் ஒன்றினை ஒடுக்கி, அதற்குத் ''தாழ்ந்தது'' என்ற முத்திரையும் இட்டு வைத்திருக்கும் விசித்திரம் ஒன்றினை இது எமக்குப் பட்டதுர்த்தனமாக வெளிக்காட்டி நிற்கின்றது.

இதிற் பேட்டியளித்துள்ள பறை இசைக்கும் கலைஞர் திரு. கதிரன் இரத்தினம் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் வேதனை அவருக்குரிய ஒரு தனிப்பட்ட வேதனையல்ல, அது தமிழ்ப் பண்பாட்டிற்கு உரிய ஒரு வேதனையாகும்.

கலாநிதி. பொ.இரகுபதி பெருங்கற்கால யாழ்ப்பாணம் என்ற தலைப்பில் 1983ஆம் ஆண்டு சிறு நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்நூலின் பின்புற அட்டையில் பறையும் அதனை இசைக்கும் கலைஞருமான ஒரு புகைப்படம் காணப்பட்டது. இதுபற்றி நான் அவருடன் உரையாடிய போதுஅதற்கு அவர் அளித்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரையின் கருத்துக்களை நான் எழுதியுள்ளேன். மேற்படி புகைப்படத்தை பின்புற அட்டையிற் பிரசுரித்து அதனை பொது பண்பாட்டின் மூலக் கூறுகளுள் ஒன்றென அவர் நினைவுபடுத்தியதும் முக்கியத்துவப்படுத்தியதும்அப்போது

விடவேறென்னஇருக்கும்'' சசப் போடு சிரித்துக்கொண்டாள். ஊரோட இருந்த காலத்தில இருந்த கொஞ்சத் தோட்டத் தோட குத்தகைக்கும் வேற காணிகளையும் எடுத்துதோட்டச் செய்கையிலே முழுமன தோடு ஈடுபட்டு நிம்மதியா கத்தான் இருந்தது அவளின்ர குடும்பம்.

கடும் உழைப்பாளியான தகப்பன் கந்தசாமியைநினைக்கும்போதே அவளின் கண்கள் குளமாகியது.

அருமையாகப்பெற்றஇரண்டு ஆண பிள்ளைகளுக்குப் பிறகு மூன்றாவதாகப் பிறந்தவள் வேணி. அமைதிகாக்க வந்த அரக்கப் படையினால் அநியாயமாகச் சாகடிக்கப்பட்டான் மூத்தவன் கருணா. அந்த அதிர்ச்சியில் இருந்து மீளும் முன்னாலே அடுத்தவன் சுரேஸ் விடுதலைப்பா யார் சொல்வது

பகலும் இரவும் அந்தக் குடிசைக்குள்ளேயே அமர்ந்திருந்து கண்ணீர் வடிக்கவும் கவலைப்படவும் வேணியால் முடிந்தது ஆனால்!

தாயான கனகமோ தான் இழந்தவற்றை நினைத்துப் பொருமுவதோடு, இருப்பவளின் எதிர்காலத்தையும்- இரண்டு பேரின் வயிற்றுப் பாட்டையும் எண்ணி துயரத்தோடுதன் வாழ் நாட்களை கழித்துக் கொண்டிருக்கிறாள்

தன் நினைவோட்டத்தை மெலல நிறுத்திவிட்டு வாசலுக்கு வந்தாள் வேணி.

பக்கத்து குடிசையில் செல்லப்பர் உரத்தகுரலில் மனைவியிடம் சொன்னார்.

''இஞ்சரப்பாஉந்தப்பையை எடு நானபோய் உந்த நிவாரணச் சாமான்களை எடுத்துக் கொண்டு வாறன்''

## நா. மனோன்மணி

''சரியப்பா நான் ஒருக்கா போட்டு வாறன் பிறகு வந்து உன்ர ஞாயத்தை கேட்கிறனப்பா''

செல்லப்பர் பாதையை நோக்கி நடப்பதை பார்த்தவாறு நின்ற வேணி குடத்தில் நீரில்லாததை கவனித்துவிட்டு குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றை நோக்கிநடந்தாள்.

அந்த தோட்டத்தில் குடியிருக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்கள் அனைத்துக்கும் குடிதண்ணீருக்கும் குளிப்பதற்கும் ஒரு கிணறுதான் இருக்கிறது. அதனால் கிணற்றடியில் எப்பேதும் ஆட்கள்தான். வெளிநாட்டுக்குப் போன யாரோ ஒரு வெளிநாட்டு அகதியின் தோட்டத்தில் உள்நாட்டு அகதியின்நெஞ்சம் கொதித்தது. — வேணியின்நெஞ்சம் கொதித்தது.

அப்பாவை இழந்து தவிப்பதற்கு அம்பதுனாயிரம் காசு தான் நிவாரணமா?

சொந்த மண்ணைவிட்டு அகதியாக ஓடி வந்ததுக்கு இந்த அரிசியும் மாவுதான் நிவாரணமா?

இந்த மண்ணைக் காக்கிறதுக்காக ஆயிரக்கணக்கில தியாகம் செய்த மாவீரர்களுக்கும் அந்தக் குடும்பங்களுக்கும் எது நிவாரணம்!

அவள் கண்களிலே செவ்வண்ணக் கொடிபோன்று சிறகடித்துபறக்கஆரம்பித்தது:

கைவிடாது சற்று நருத்தத்துடன் அரசவை இசைக்கருவியாகப் பேணிக் கொண்டனர். சிங்களவர்களது கண்டிய நடனத்தில் இவ்விசைக் கருவியே உபயோகத்தில் உண்டு. எனவே சிங்கள மக்கள் மத்தியில் பறை மேன்மைக்குரிய கருவியாக அரசவை அந்தஸ்தைப் பெற்று தொடர்ந்து நிலவ தமிழ் மக்கள் மத்தியில் அது பெரிதும் கைவிடப்படும் ஒன்றாகவும் தாழ்வுக்குரிய ஒன்றாகவும், கருதப்படலாயிற்று.

ஆரம்பகாலத்தில் தமிழரது வழிபாட்டோடும், மங்களகரமான நிகழ்ச்சிகளோடு பறை சம்பந்தப்பட்டதொன்றாகவே இருந்தது இன்றும் பல கிராமிய கோயில்களில் பறைதொடர்ந்தும்இசைக்கப்படுவதுஇதற்கு ஒரு நல்ல சான்றாகும் இவ்விசைக்கருவி மங்களகரமான நிகழ்வுகளிலிருந்து நீக்கப்பட்டு அமங்கலமான மரணக்கிரியைகளுக்கே பெரிதும் உரியது என்ற நிலை உருவானது. இந்த விடயத்தில் திராவிடப் பண்பாட்டுக்கருவூலம் ஒன்றினைத் தமிழரைவிடச் சிங்களவர் அதிகம் பேணுகின்றனர் எனலாம்.

தமிழ் மக்கள் மத்தியில் மானிடவியல் ஆய்வு இன்னும் ஆரம்பிக்கப்படக்கூட இல்லை ஆதலினால் பறையைப் பற்றியும் இதனை வாசிக்கும் கலைஞர்கள் சம்பந்தமான முக்கியத்துவத்தினைப் பற்றியும் நாம் உணரக்கூடியதாக இல்லை.

ஒன்றினை இது எமக்குப் பட்டதுர்த்தனமாக வெளிக்காட்டி நிற்கின்றது.

இதிற் பேட்டியளித்துள்ள பறை இசைக்கும் கலைஞர் திரு. கதிரன இரத்தினம் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் வேதனை அவருக்குரிய ஒரு தனிப்பட்ட வேதனையல்ல, அது தமிழ்ப் பண்பாட்டிற்கு உரிய ஒரு வேதனையாகும்.

கலாநிதி. பொ.இரகுபதி பெருங்கற்கால யாழ்ப்பாணம் என்ற தலைப்பில் 1983ஆம் ஆண்டு சிறு நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்நூலின் பின்புற அட்டையில் பறையும் அதனை இசைக்கும் கலைஞருமான ஒரு புகைப்படம் காணப்பட்டது. இதுபற்றி நான் அவருடன் உரையாடிய போதுஅதற்கு அவர் அளித்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரையின் கருத்துக்களை நான் எழுதியுள்ளேன். மேற்படி புகைப்படத்தை பின்புற அட்டையிற் பிரசுரித்து அதனை பொது பண்பாட்டின் மூலக்கூறுகளுள் ஒன்றென அவர் நினைவுபடுத்தியதும் முக்கியத்துவப்படுத்தியதும்அப்போது என்னை பெரிதும் கவர்ந்திருந்தது.

எமது பண்பாட்டோடு தழுவியதும். எமது தேசிய உருவாக்கம் சம்பந்தமானதுமான விடயங்களை ஒட்டிய இவ்வாறான பேட்டிகளுக்கு ஓர் அரசியல், பண்பாட்டு, வரலாற்று முக்கியத்துவம் உண்டு.

## விண்வெளிக் கலமும் கிரகவாசியும்

சென்ற ஆண்டு ஆகஸ்ட் 12ஆம் திகதி பசுபிக் சமுத்திரத்தில் இருந்து ஓர் அமெரிக்க கடற்படைக் கப்பல் தளத்தில் ஓர் விண்வெளிக் கப்பல் வந்திறங்கியிருக்கிறது புருவமற்ற பூனைக்கண் உடைய ஒருவனைக் கப்பல் படையினர் பிடித்திருக்கிறார்கள். மூன்று நான்கு வயதுச் சிறுவனைப் போல காணப்படும். அவன், தன் வயது ஐநூறு என்கிறான்.

அந்த விண்வெளிக்கலமும் கிரகவாசியும் வாஷிங்டனில் ரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாக சி. ஐ. ஏ. உளவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவர் போட்டோக்களுடன் வெளியிட்டிருக்கிறார். சி. ஐ. ஏ. ஏஜெண்டுகள் பலர் அவனுடன் பேசி இருக்கிறார்களாம். புஷ் கூட பேசினதாகச் செய்தி. பல மொழிகளை கிரகித்துக் கொள்கின்ற சக்தி பெற்றிருக்கிறான்.

விஞ்ஞானிகள் அந்த வேற்றுக் கிரக வாசியை ஆராய்ந்து வருகின்றனர். வேற்றுக் கிரகத்திற்கு பயணம் செய்யக்கூடிய சக்தி வாய்ந்த விண்வெளிக்கலத்தை உருவாக்கும். முயற்சிக்கு அந்த கிரகவாசியின் தகவல்கள் பயன்படுமா என்று பார்க்கிறார்கள்.

ஏன்ரோமெடாகே லாக்ஸியைச் சேர்ந்த எல்னார் என்ற கிரகத்தைச் சேர்ந்தவன் என்று அவன் சொல்கிறான் ஐக்யூ நானூறைத் தாண்டுகிறது.

அதி மேதாவியாகத் தென்படுகிறான் அவனுடையஉணவு சாதாரணமாகவே இருக்கிறது. கறுப்பு பெரி பழத்தைச் விரும்பிச் சாப்பிடுகிறான் ஆட்டுப்பால் குடிக்கிறான்.

அவன் வந்த விண்வெளிக்கலத்தை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

நவம்பரில் நடக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது புஷ் இந்த கிரக வாசியை வெளிக்கொணர்ந்து பரபரப்புவாக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சி. ஐ, ஏ. யோ வெள்ளை மாளிகை அதிகாரிகளோ இச்செய்தியை மறுத்து இது வரை எதுவும் கூறாததாலேயே உண்மையாயிருக்கும் என்று பலர் கருதுகிறார்கள்.

## சுதந்திரத்தைக் கூட்டிவர

நாம் போகிறோம்!
எங்கோ தொலைந்து
எட்டிப் பார்க்கும் சுதந்திரத்தின்
இடம் பிடித்தோம்.
நடைபயின்றோம்.
பற்று நம் பயணத்தின் வித்து.
உறுதி நம் கால்களுக்கு கேடயம்
தியாகம்!
இதற்குள்தான் நம் தாயகம்

உயிர்களை நிரப்பி வைத்திருக்கும்உடலம்,
ஒருநாள் சடலம்
உண்மையாய் வாழ்ந்தால் என்ன?
உலகுக்காய் வாழ்ந்தால் என்ன?
உரிமைக்காய் வீழ்ந்தால் என்ன?
எதிர்காலம் நிம்மதியாய் வாழாதாளன்ன?

நம்மவர்
ஒருபிடி இரக்கம் கேட்டார்; கிடைத்ததா?
ஒருபிடி உணவு கேட்டார்; கிடைத்ததா?
உரிமைகள் தேவையில்லையா?
பேச்சளவில் நிற்கும் சுதந்திரக் காற்று
மூச்சளவில் வேணும்.

இடிபாடுகளின் நடுவே
மறைந்து போன, தொலைந்துபோன
நம் ஊர்களைத் தேடுவோம்.
எங்கும் காதல் கண்டோம்.
மண்ணிலே கொண்ட காதல் மகத்தானது.

மண்ணும், விண்ணும்
மதியும், கடலும்
காடும். மேடும்
மழையும், வெயிலும்
பனியும், குளிரும்
பகையும் சாட்சி
நாமில்லாக் காலத்தில்
நாளை நம்மவர்க்குச் சொல்லும்.
இவர்கள் இதற்காகத்தான்; என்று,

தசாப்தங்கள் ஆகி, ஆகி மறைந்தாலும்
எங்கோ ,தொலைந்து
எட்டிப் பார்க்கும் சுதந்திரத்தை
கூட்டி வருமட்டும்,
நம் ஐம்புலன்களும் அணிவகுக்கும்.

— இளந்திரையன்

## நூறுவயது ஆலமரம்

அடையாறு ஆலமரம் தமிழகத்தில் எவ்வளவு பிரசித்தமோ அந்த அளவுக்கு அஸ்ஸம் கௌஹாத்தியில் உள்ள நூறு வயது ஆலமரம் பிரசித்தம் சமீபத்தில் பிரதமர் நரசிம்மராவ் கௌஹாத்தி பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக வந்தார் பிரதமரின் பாதுகாப்பு காரணங்களுக்காக பொலிஸார் அந்த ஆலமரத்தை வெட்டிவிட்டனர்

ரியோ சுற்றுப்புற சூழல் மாநாட்டுக்குச் சென்று வந்த பாதிப்பிலோ என்னவோ அன்று பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர். காங்கிரசை ஆலமரத்துக்கு ஒப்பிட்டு உற்சாகமாகப் பேசினார்அவர் பேசிய அதே மைதானத்தில் அன்றுதான் ஓர்ஆலமரம் வெட்டி வீழ்த்தப்பட்டது என்ற தகவல் இறுதி வரை அவருக்குத் தெரியாது.

### சிவநாயகமும்

யாரோடு நின்றார், நிற்கவில்லை என்பது முக்கியமல்ல தமிழர்களின் தேசிய எழுச்சியில் பத்திரிகைகளின் பங்கு பற்றிச் சரியான திசையில் சிந்தித்தவர்களுள் அவர் தவிர்க்க முடியாதவர் என்பதே முக்கியம் எந்த ஒரு தேசிய எழுச்சியும், சுதந்திரத்துக்கான போராட்டமும் அது நிகழும் சமூகத்தின் சகல சார, பண்பாட்டு, அறிவியல் தளங்களில் விழிப்பைக் கோரி நிற்கிறது. இத்தகைய தேசிய விழிப்பின் மையங்களாக அல்லது விழிப்புக்கான அடைசாக்கும் மையங்களாக பத்திரிகைகள்தான் அமைய முடியும். தமிழ்த்தேசியம் என்பது அதன் பிரதேச பிராந்திய கிராமிய, சாதிய, சமய வேறுபாடுகளைத் தாண்டி எழும் ஓர் உன்னத மனோநிலை இதைச் சாதிப்பதில் பத்திரிகைகள் பிரதான பங்கை ஆற்ற வேண்டியுள்ளது தமிழ் நாட்டில் வெளிவரும் தினசரிகளைப்பற்றி விமர்சிக்கும் இந்து ராம் (இவருடைய தமிழீழம் பற்றிய கருத்துக்களோடு நாம் உடன்படத்தேவையில்லை) எந்த ஒரு பத்திரிகையும் தன்னைத் திருப்திப்படுத்தவில்லை என்று கூறுகிறார்.

ஆந்திரந்திலிருந்து வரும் ''ஈநாடு'' போலவோ கன்னடத்தில் வரும் சில பத்திரிகைகளின் தரத்திற்கோ தமிழ் நாட்டில் ஒரு பத்திரிகையும் இல்லை என்றும் அவர் கூறுகிறார் (சுப மங்களா ஒ ஸ்ற் 92) ராம் கூறுவது போல ''விரிவான இன்னும் பல தளங்களில்'' ஒரு பத்திரிகை தனது பங்கினை ஆற்றுவதற்கு வேண்டிய கட்டாயத்தேவையும் அதற்குரிய ஒரளவிற்குத் தயாரிக்கப்பட்ட தளமும் தமிழகத்தை விடவும் ஈழத்திலதான் அதிகம் காணப்படுகிறது. இங்கு உருவாகிவரும் தேசிய விழிப்பு முழுச்சமூகத்தையும் உலுப்புவதாயுள்ளது பத்திரிகை என்பது திரு. மு. திருநாவுக்கரசு கூறுவது போல ஒரு சமூகத்தின் நரம்பு மையமாக இருக்க வேண்டிய கட்டாயங்களும், நிர்ப்பந்தங்களும் ஈழததில் தான் அதிகம் கனிந்து காணப்படுகின்றன மரணத்தை ருசிபார்க்கும் துணிச்சலும் ஓர்மமும் இங்கே தான் நிருபிக்கப்பட்டுள்ளன இந்திய விமர்சகர் திரு எஸ் வி. ராஜதுரை சற்றடே றிவியூவின் சகோதர வாரப்பத்திரிகையான திசையைபோல ஒரு பத்திரிகை தமிழ்நாட்டில் வந்ததில்லை என்று கூறுகிறார் நியூ ஏரா குடும்பப்பத்திரிகைகளான சற்றடே றிவியூவும், திசையும் தமிழ்தேசிய விழிப்பின் தேவைகளை எவ்வளவு தூரம் பூர்த்தி செய்தன என்பது பற்றிய விவாதங்கள் இனிமேற்தான் விரிவாகச் செய்யப்பட வேண்டியுள்ளது எனினும், ''ஈழகேசரியின்'' முழு இலங்கைக்குமான தேசியத்துவத்திலிருந்தும், இனமானத் தமிழ் அரசியலின் உணர்ச்சித் தளத்தில் நின்ற ''சுதந்திரனி''லிருந்தும் இவை யிரண்டும் வித்தியாசப்படுகின்றன என்பதையும் பெருமைப்படக்கூடிய சில முன்னுதாரணங்களை இவை கொண்டிருந்தன என்பதையும்யாரும் மறுப்பது கடினம்.

# நெடுங்கேணி இந்திய ராணுவ மினி முகாம்:

# புலிகள் தாக்கி நிர்மூலமாக்கிய வரலாறு

நெடுங்கேணி பாடசாலை இந்திய இராணுவ மினிமுகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவத்தை இத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச் சென்ற முன்னாள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவின் தளபதியான மேஜர் கிண்ணி விபரிக்கிறார். இவர் 10-07-92 இல் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவார்.

**[4]**

நாங்கள் ஐவர் இருந்த அறைவாசலில் சாய்ந்து கொண்டிருந்த இரண்டு இந்தியச் சிப்பாய்களும். உடனடியாக நிலத்தில் விழும் சத்தமும் அதனைத் தொடர்ந்து இரகசியமாக எல்.ரி.ரி.ஈ என கத்துவதும் எமக்கு தெளிவாக கேட்டது. உடைந்த யன்னலுடன் சாய்ந்து கொண்டு இருந்த இந்திய சிப்பாய் ஓடிச்சென்று பிரதான பாதையுடன்அமைந்திருந்த காவல் அரணில் இருந்து துப்பாக்கியால் எமது அறையின் உடைந்த யன்னலில் சாய்ந்து இருந்த இந்தியச் சிப்பாய் தனது துப்பாக்கியின் பெரும் பாகத்தை வேலிமுட் கம்பிகளுக்கு இடையில் சிக்கலான பகுதியில்நீட்டிவெளிப்புறமாக வெளிப்புறத்தை நோக்கி 4, 5 வேட்டுக்களை சுட்டபடி இருந்தான்.

னாலும் அப்படியே உறைந்து போய் வாயை ஆ எனத்திறந்தபடி கண்வெட்டாமல் எமை பார்த்தனர். சுதனும் ஜெகனும் அவர்களை சுட்டு வீழ்த்தினர். நாங்கள் அவர்கள் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு அவர்கள் காவலரண்கள் நோக்கி (பின்புறமாக] ஓடினோம். ஓர் இடத்தில்

நாங்கள் ஐவரும் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப்பயன்படுத்துவதற்காக எமது அறைக்கதவினை திறந்து கொண்டு திடீர் என்று நானும் எல்விற்ரனும் வெளியில் பாய்ந்தோம்.

அப்போது எமது அறை வாசலில் விழுந்து படுத்துக் கிடந்த இரண்டு இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கிகள் எமது அறைக்கதவு ஓரமாக சாத்திவைக்கப் பட்டிருந்ததை கண்டோம். எமது கையில் சுடுவதற்கு தயாராக இருந்த ரைபிள்களையும், எம்மையும் கண்ட அவ்விரு சிப்பாய்களும் உடனடியாக அதிர்ச்சியினாலும் ஏக்கத்தி இருந்த குடியிருப்புக்களை நோக்கி சுட்டுக் கொண்டிருந்தான் அவனின் அருகில் சத்தமின்றிச் சென்ற நான் அவனை நோக்கி எனது துப்பாக்கியின் நுனியை குறி பார்த்தபடி அவனது இராணுவப் பாதணியில்எமது காலால் உதைத்து இங்கு என்ன செய்து கொண்டு இருக்கின்றாய் எனக் கேட்டேன். அது வரை எனை அவதானிக்காத சிப்பாய் துப்பாக்கிகளின் வேட்டு சத்தத்திலும் மறு புறங்களில் இறந்து கொண்டிருந்த இந்தியச்சிப்பாய்களின் மரண ஓலங்களிலும் நான் அழைத்தது கேளாததுபோல திரும்பிப் பார்த்தான். எனது துப்பாக்கி முனையையும் எனது நிலையையும் கண்ட அந்த சிப்பாய் வாயடைத்துப் போய் எனை சுடுவதற்காக தனது துப்பாக்கியை முட்கம்பிகளுக்கு இடையில் இருந்து இழுத்து எடுக்க முயற்சித்தான். ஆனால் துப்பாக்கி நாடா முட்கம்பியில் சிக்கியதால் துப்பாக்கியை எடுக்க முடியவில்லை. உடனடியாக கைகளை உயர்த்தி கத்தியபடி எனது துப்பாக்கியையும் காலையும் பிடிப்பதற்கு திரும்பினான். ஆனால் அதற்குள் அவனது தலையில் துப்பாக்கியால் சுட்டு அவனது ஆயுதத்தையும் கைப்பற்றினேன்.


இந்த நேரத்திற்குள் ஜெகனும் எல்விற்ரனும் இராணுவத்தினரின் மோட்டார் (எறிகணை ) நிலையில் இருந்த இரண்டு இந்திய இராணுவத்தினரையும் சுட்டு விட்டு அவர்களுடைய மோட்டாரையும் அவற்றிற்குரிய ஷெல்களையும் கைப்பற்றினர். அதுவரை எம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை சுதனிடமும் கணேசிடமும் ஒப்படைத்து விட்டு முகாமின் மறுபக்கம் சென்றோம் அங்கு இருந்த இந்திய சிப்பாய் ஒருவரையும் சுட்டு விட்டு அவனது ஆயுதத்துடன் கணேசிடம் வந்து ஆயுதத்தை கொடுத்தோம்.

பின்னர் ஜெகனும் சுதனும் முகாமின் பின்புறமாக காந்தனுடைய அறையை நோக்கி சென்றனர். நானும் எல்விற்ரனும் கணேசிடம் ஆயுதங்களை கொடுத்து விட்டு, முன்புறமாக வீழ்த்தப்படாமல் இருந்த தங்கேசினுடைய பகுதியை நோக்கி சென்றோம். அங்கு தங்கேசினுடைய அறையில் இருந்து மூவர் வெளியில் வந்து அறையின் ஓரத்தில் நின்று தாக்குதல் நடாத்திக் கொண்டு இருந்தனர் மற்றைய இருவரும் வெளியில் வரவிடாதவாறு வாசலிற்கு முன்னால் உள்ள புளிய மரம் மறைவில் இருந்து அம்முகாம் அதிகாரி அறை வாசலை நோக்கி எஸ் எம் ஜி இனால் சுட்டுக் கொண்டு இருந்தான். உள்ளே உள்ள இரண்டு போராளிகளுக்கும் உதவியாக வெளியில் நின்று நாங்கள் அவ் அதிகாரியை நோக்கி சுடத் தொடங்கினோம். அதனால் அவ் அதிகாரியின் முதுகில் பல குண்டுகள் துளைக்க உடனேயேமாண்டுபோனான். உள்ளே இருந்த இரண்டு போராளிகளும் உடனடியாக வெளியேறி அவர்களுக்கு என வழங்கிய காவலரண்களை அழித்தொழிக்கத் தொடங்கினர்.

அம்முகாம் எங்கும் துப்பாக்கியினுடைய முழக்கமும்,கைக்குண்டுகளின் பாரிய சத்தங்களும்காதுகளைசெவிடாக்கின.

இதனிடையே முற்றாக கைப்பற்றப்படாமல் இருந்த தங்கேசினது பகுதியை நோக்கி எல்விற்ரை உதவிக்கு அனுப்னோம். ஆனால் நான் எதிர்பாராத விதமாக, சென்று கொண்டிருந்த எல்விற்றனை நோக்கி அவனிற்கு மிகவும் அருகில் இருந்து இந்திய இராணுவத்தினரின் எல். எம் ஜி ஒன்று குண்டுகளை கக்கத் தொடங்கியது, இதனால் எல்விற் அந்த இடத்திலேயே விழுந்து நிலையெடுத்து விட்டான்எல்.எம் ஜிகாவலரணோ எனக்கும் தங்கேசிற்கும்இடை நடுவே அமைந்து விட்டதால் என்னால் அதிகம் துப்பாக்கியினால் சுடமுடியாத ஓர் நிலையில் இருந்தேன். இதனால் அக்காவலரண் மீது சில சூடுகளை சுட்டுவிட்டு என்னிடம் இருந்த கைக்குண்டு ஒன்றை அக்காவலரண் மீது வீசினேன் அக்குண்டு காவலரணிற்கு பின்புறமாக இராணுவத்தினரின் பாவனைக்காக போடப்பட்டிருந்த பாடசாலை மேசை ஒன்றின் மீது பட்டு வெளியிலேயே வெடித்துச் சிதறியது. இக்குண்டினால் உள்ளே இருந்த இராணுவத்தினர்எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. நான் கத்தியபடி கைக்குண்டினை வீசியதை அக்காவலரணில் இருந்த இரண்டு இந்தியச் சிப்பாய்கள் கண்டு விட்டனர் உடனடியாக அவர்களின் கவனம் என்மீது திரும்பியது. அக்காவலரண் உள் இருந்து இரண்டு எஸ்.எல்.ஆர்உம் எல் எம்ஜியும் என்னை நோக்கி ஒரேநேரத்தில் சுடத்தொடங்கின. இச்சூட்டில் இருந்து தப்புவதற்காகஅருகில் இருந்த மரங்களுள் என்னை மறைத்துக் கொண்டேன். இருந்த போதிலும் எனது தொடையில் சிறு காயம் ஒன்று ஏற்பட்டது எல் எம் ஜி ஐ நோக்கி எனதுதுப்பாக்கியால்சுட்டேன் பின்னர்என்னைநோக்கிஇரண்டுஎஸ் எல் ஆர் துப்பாக்கியால் எல்விற்றனை நோக்கி எல் எம் ஜி யும் தொடர்ந்து சுட்டபடி இருந்தார்கள். இந்த நேரத்தில் எனது காற்காயத்துக்கு சரத்தினைக் கிழித்து கட்டுப் போட்டு விட்டு என்னிடம் எஞ்சி இருந்த அடுத்த கைக்குண்டினையும் எடுத்து கிளிப்பை கழற்றிய எனக்கு இந்த எல் எம் ஜி யை விழுத்தா விட்டால் எல்விற்றனையும், இன்னும் பலரையும் பறி கொடுக்க வேண்டும். என்றும் இதனால் இத்தாக்குதல் தோல்வியிலேயே முடியும் என்பதும் மிகவும் தெளிவாக விளங்கியது

தொடர்ந்து அடுத்த நடவடிக்கையாக இராணுவத்தினர் எதிர்பாராத வேளை எதிர்பாராத விதமாக கைக்குண்டுடன் அவர்களுக்கு நேர்எதிரில் அவர்களை நோக்கி கத்தியபடி ஓடினேன். க்(தொடரும்




## மனிதனின் மிகப்பெரிய சாதனைகள்

1. அப்பலோ 13 [1970] சந்திரனின் தொலைப் பகுதியைத் தொட்ட போது அதைச் செலுத்திய விண்வெளி வீரர்கள். மனிதன் பூமியிலிருந்து தள்ளியிருந்த மிகத் தொலைவு தூரம். 248.665 மைல்கள் என்ற சாதனையைப் புரிந்தார்கள்.

2. ''ப்ளுப்ளேம்'' என்பது மிக வேகமாக நிலத்தில் செல்லும் சக்கரவண்டி. 1979 இல் உடாவிலுள்ள போன்வில்லி சால்ட்ப்ளாட்ஸ் எனுமிடத்தில் அது மணிக்கு 650 மைல் வேகத்தை எட்டியுள்ளது.

3. சிகாகோவிலுள்ள ஸியர்ஸ் டவர் என்பது உலகத்திலே மிக உயரமான கட்டடமாகும். 1454 அடி உயரமான இக் கட்டிடத்தில் 110 மாடிகள் உள்ளன. இதில் உள்ள 103 மின் ஏற்ற மாடங்கள்- (எல வேட்டர்) 16,700 மக்களுக்கு சேவைபுரிகின்றன.

4. ரஷ்யாவிலுள்ள ''மதர்லாந்து'' என்பது உலகத்திலேயே மிக உயரமான சிலை 270 அடி ஆகும்.

5. பிக்கார்டும், வால்ஷிம் 1960 இல் கடலுக்கடியில் மிக ஆழத்தில் பிரயாணம் செய்திருக்கிறார்கள். 15,820 அடி ஆழத்திற்குச் சென்று அவர்கள் கடலின் அடித்தளத்தை அடைந்திருக்கிறார்கள்.

தகவல்: தமிழ்ச்செல்வன்
வேலணை.

# விழுதுகள்

ராஜன் அழவில்லை- பாறை இறுகியது.

மாதகலில் தன்னுடன் நின்ற ஏழு

லை, ஓய்வில்லை, உணவில்லை-தன்னைப் பிழிந்து மூத்துழைக்கு உரம்கொடுத்தான் பானுவின் உற்ற துணையாய்

கடுமையாய் . . . எமது வீரர்களை இருபுறமும் சூழ்ந்தபடி எதிரி ராஜனை உணர்ச்சி வசப்படவைக்கும் கடும் சண்

எட்டநிற்க வைப்பதற்கன்றி வேறில்லை: அனுபவம் மிக்க வீரன் அவனது அனுபவங்கள் மெய்சிலிர்க்கும் கதைகள்.

நாங்கள் இவரும் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப்பயன் படுத்துவதற்காக எனது அறைக்கதவினை திறந்து கொண்டு திடீர் என்று நானும் எல்விற்றனும் வெளியில் பாய்ந்தோம்.

அப்போது எமது அறை வாசலில் விழுந்து படுத்துக் கிடந்த இரண்டு இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கிகள் எமது அறைக்கதவு ஓரமாக சாத்திவைக்கப் பட்டிருந்ததை கண்டோம். எமது கையில் சுடுவதற்கு தயாராக இருந்த ரைபிள்களையும், எம்மையும் கண்ட அவ்விரு சிப்பாய்களும் உடனடியாக அதிர்ச்சியினாலும் ஏக்கத்தி சத்தமின்றிச் சென்று நான் அவனை நோக்கி எனது துப்பாக்கியின் நுனியை குறி பார்த்தபடி அவனது இரானுவப் பாதணியில் எமது காலால் உதைத்து இங்கு என்ன செய்து கொண்டு இருக்கின்றாய் எனக் கேட்டேன். அது வரை எனை அவதானிக்காத சிப்பாய் துப்பாக்கிகளின் வேட்டு சத்தத்திலும் மறு புறங்களில் இறந்து கொண்டிருந்த இந்தியச்சிப்பாய்களின் மரண ஓலங்களிலும் நான் அழைத்தது கேளாததுபோல திரும்பிப் பார்த்தான். எனது துப்பாக்கி முனையையும் எனது நிலையையும் கண்ட அந்த சிப் சென்றனர். நானும் எல்விற்றனும் கணேசிடம் ஆயுதங்களை கொடுத்து விட்டு, முன்புறமாக வீழ்த்தப்பட்டமால் இருந்த தங்கேசினுடைய பகுதியை நோக்கி சென்றோம். அங்கு தங்கேசினுடைய அறையில் இருந்து மூவர் வெளியில் வந்து அறையின் ஓரத்தில் நின்று தாக்குதல் நடாத்திக் கொண்டு இருந்தனர் மற்றைய இருவரும் வெளியில் வரவிடாதவாறு வாசலிற்கு முன்னால் உள்ள புளிய மரம் மறைவில் இருந்து அம்முகாம் அதிகாரி அறை வாசலை நோக்கி எஸ் எம் ஜி இனால் சுட்டுக் கொண்டு இருந்தான். உள்ளே உள்ள இரண்டு போராளிகளுக்கும் உதவியாக வெளியில் நின்று நாங்கள் அவ் அதிகாரியை நோக்கி சுடத் தொடங்கினோம். அதனால் அவ் அதிகாரியின் முதுகில் பல குண்டுகள் துளைக்க உடனேயேமாண்டுபோனான். உள்ளே இருந்த இரண்டு போராளிகளும் உடனடியாக வெளியேறி அவர்களுக்கு என வழங்கிய காவலரண்களை அழித்தொழிக்கத் தொடங்கினர்.

அம்முகாம் எங்கும் துப்பாக்கியினுடைய முழக்கமும், கைக்குண்டுகளின் பாரிய சத்தங்களும்காதுகளைசெவிடாக்கின. இதனிடையே முற்றாக கைப்பற்றப்படாமல் இருந்த தங்கேசினது பகுதியை நோக்கி எல்விற்றை தங்கிக்கு அனுப்னோம். ஆனால் நான் எதிர்பாராத விதமாக, சென்று கொண்டிருந்த எல்விற்றனை நோக்கி அவனிற்கு மிகவும் அருகில் இருந்து இந்திய இராணுவத்தினரின் எல். எம் ஜி ஒன்று குண்டுகளை கக்கத் தொடங்கியது, இதனால் எல்விற் அந்த இடத்திலேயே விழுந்து நிலையெடுத்து விட்டான்எல்.எம் ஜிகாவரணோ எனக்கும் தங்கேசிற்குமிடை நடுவே அமைந்து விட்டதால் என்னால் அதிகம் துப்பாக்கியினால் சுடமுடியாத ஓர்

3. சிகாகோவிலுள்ள ஸியர்ஸ் டவர் என்பது உலகத்திலே மிக உயரமான கட்டடமாகும். 1454 அடி உயரமான இக் கட்டிடத்தில் 110 மாடிகள் உள்ளன. இதில் உள்ள 103 மின் ஏற்ற மாடங்கள்- (எல வேட்டர்) 16,700 மக்களுக்கு சேவைபுரிகின்றன.

4. ரஷ்யாவிலுள்ள ''மதர்லாந்து'' என்பது உலகத்திலேயே மிக உயரமான சிலை 270 அடி ஆகும்.

5. பிக்கார்டும், வால்ஷும் 1960 இல் கடலுக்கடியில் மிக ஆழத்தில் பிரயாணம் செய்திருக்கிறார்கள். 15,820 அடி ஆழத்திற்குச் சென்று அவர்கள் கடலின் அடித்தளத்தை அடைந்திருக்கிறார்கள்.

தகவல்: தமிழ்ச்செல்வன்
வேலணை.

# விழுதுகள்

மில்ஒன்றாய்இருந்து ,மலைக்கு மூட்டை சுமந்து , கழுதை கலைத்து , பணிஸ் மென்ற் வாங்கி .., பயிற்சி முடித்து , கரைக்கு வந்து .,எல்லாம்வரை ஒன்றாய் இருந்த தெய்வா பிரிந்து விட்டான். கடலில் ஓட்டியாய் போனவன் வரவில்லை. அவன் வரவில்லையென்று மாதகல் அழுதது. ராஜன் அழவில்லை. அந்தப் பாறை இறுகியது.

ராஜனும் தும்பனும் பிரிந்தது கிடையாது. ராஜன் என்றால் தும்பன்; தும்பன் என்றால் ராஜன்.

துப்பாக்கிகள் பங்கிடும்போது ''தும்பனுக்கு கையேலாது எம் - 16 தான் வேணும் அம்மான்.'' ராஜன் சொல்ல சூடுபட்டு உடைந்து வளைந்த கையைத் தும்பன் மேலும் வளைத்துவந்து வாங்கிவிட்டு மறைவாய்ப் போய் பெரிதாய்ச் சிரித்தார்கள்.

ஒன்றாய்ச் சாப்பிட்டு, அடிபட்டு, கலைபட்டு ராஜனின் உயிருடன் இணைந்த நட்பு.

சுன்னாகத்தில் காலில் இரண்டு வெடிபட்டு-காயம் மாறி இந்தியாவில் இருந்து வந்தபோது தும்பன் இல்லை! என்ற செய்தி அவனுக்குத் தெரிந்து தானிருந்தது.

இராணுவத்தின் சூடுதானா? விபத்தா? என எல்லோரையும் ஓடி ஓடிக் கேட்டு ஓய்ந்திருந்த வேளையில் தும்பன் இல்லாத ஏழாலைக் கிணற்றுக் கட்டு, வாழைத்தோட்டங்கள், பனங்கூடல்கள், கலைபட்டுப் பாய்ந்த வேலிகள் துரையண்ணை வீட்டு ஊஞ்சல் என்று எல்லாமே வெறுமையாய்த் தெரிய ரங்கன் அழுவான். ராஜன் அழமாட்டாட்டான்- அந்தப்பாறை இறுகியது.

ரங்கன் சைக்கிள் உழக்க பாரில் ராஜன் சுட்டுவிரல் விசைவில்லையொட்டியபடி கொஞ்சம் அழுத்தினால் ரவை பாயும் எங்கும் போகும் சைக்கிள்; சட சடஎன்று வெடிகேட்கும் சைக்கிள் ஒன்றுடன் கொஞ்சம் ரவையும் செலவாகும்

''தப்பியது ரங்கனால்'' என்பான் ராஜன். ''ராஜண்ணை இல்லையென்றால் நான் இல்லை'' என்பான் ரங்கன்.

மாவிட்டபுரத்தில் வைத்து வரிசையாய் வந்த மொட்டை ஜீப்புக்கு அடிக்க, நல்லாய் நடந்த சண்டை நெடுமாறன் இறந்து ரங்கன் காயப்பட திசை மாறியது.

திருச்சியில் "ராஜண்ணை ராஜண்ணை'' என்று ரங்கன் உரத்துக் கூறி மெல்ல முனகி அழுது துடித்து, மௌனித்த போதும் யாழ்ப்பாணத்தில் நின்ற ராஜன் அழவில்லை- பாறை இறுகியது.

மாதகலில் தன்னுடன் நின்ற ஏழு பேரை வைத்து பெரும் கூட்டமாய் வந்த இந்தியக் கைக்கூலிகளை அடித்துக் கொன்று கலைத்து பெரும் தொகையாய் ஆயுதம் அள்ளிவந்தபோது;

எல்லா நாளும் ராஜனுடன் திரிந்த வெற்றி திரும்பிவரவில்லை.

ஆயுதங்கள் எல்லாம் அப்படியே குவிந்து கிடக்க, காயப்பட்ட தம்பியையும் வெற்றியின் உடலையும் குப்பிளானில் நின்ற கிளியிடம் அனுப்பி விட்டு ஆயுதங்களுக்குக் காவலாய் நின்றபோதும் ராஜன் அழவில்லை. அந்தப்பாறை தான் இறுகியது.

இந்தியா போனது. தமிழீழவீடெங்கும் மகிழ்ச்சிக் குரல்கள். தெருவெங்கும் புலி வீரர்- மிச்சமாயிருந்தன இந்திய எச்சங்கள் புலனாய்வுப் பணியில் ராஜன்.

அவனது மனம் விடுதலைப் போரையும் அதனுடன் இணைந்தவற்றையும் தவிர வேறொன்றைப் பற்றியும் எண்ணியதே கிடையாது

இப்படித்தான் ஒருநாள் அவனுடன் பாடசாலையில் படித்தவன் அவனது இயக்கத் தொடர்பிலும் மீண்டும் அறிமுகமாகிப் பழகிக் கடிதமொன்றில் என்னமோ எழுதி அவனிடம் அனுப்பி விட்டுக் காத்திருந்தான்; பாவம்

கடிதத்தை படித்தவன் பக்கத்தில் நின்றவனுடன் நேரே போய்க் கடிதத்தை கிழித்துக் கொடுத்து விட்டு 'போராட்டம் தவிர நானொன்றும் நினையேன்'' என்றான்.

தன் ஆசை மகன் போகும் வாகனத்தையென்றாலும் பார்ப்போமென்று தாய்க் கிழவி றோட்டில் கால்கடுக்க காத்து நிற்க, இவன் மாதகலில்தான் போன வேலையை முடித்து திரும்பி வருவான்.

சிறிலங்காவுடன் சண்டை தொடங்கியது ராஜன் ஓய்வின்றிச் சுழன்றான். அடிக்கடி அண்ணையைச் சந்தித்தான் எல்லா இடமும் திரிந்தான். ஒவ்வொரு பங்கருக்கும் ஒவ்வொரு மண்மூடைக்கும் இடம் சொன்னான்

மயிலிட்டியில் பெரும் சமர் ராஜன் ஊண் உறக்கமின்றி நின்று வழி மழையாய்ப் பொழியும் ஷெல்கள்- ரவைகள் மயிலிட்டிச் சண்டையில் மட்டும் இரண்டு தடவைகள் குண்டுச் சிதறல்கள் அவனைத் துளைத்துச் சென்றன. ஓய்வில்லை அங்கு நடந்து கொண்டிருந்த யுத்தத்தில் இருந்து அவனால் ஒதுங்கியிருக்க முடியவில்லை. கோட்டை முற்றுகை இறுகஇறுக எங்கள் தளபதிகளின் தூக்கமற்ற இரவுகள் பெருகிக்கொண்டிருந்தன-மணியந்தோட்டத்தில் இருந்து பொன்னாலை வரை நின்ற இளம் போராளிகள் ராஜனைக்கண்டு சிரிப்பர் இரவில்லை, பகலில்லை, ஓய்வில்லை, உணவில்லை-தன்னைப் பிழிந்து முற்றுகைக்கு உரம்கொடுத்தான் பானுவின் உற்ற துணையாய் முற்றுகைக்கு துணைநின்றான்

எம்மால் உள்ளிறங்கமுடியாதுபோய் விட்ட, இரண்டாவது கோட்டை உட்புகல் நடவடிக்கை முடிந்து விடிந்த போது,

'றோமியோ நவம்பர் றோமியோ நவம்பர்'' என்று பானுவின் வோக்கி கூப்பிட்ட போதும் பதிலில்லை-

மானிப்பாய் மருத்துவமனையில் பேச்சு மூச்சின்றி கிளி, ஜவான் ஆகியோருக்கு இடையில் கந்தல் துணிபோல் சுருண்டு போய்க் கிடந்தான்.

காயம் மாறி கொஞ்சம் தேறி எழும்பிவந்தவன் இப்போ சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில்.

இந்தக்காலம் ராஜனை ஒரு சிறந்த நிர்வாகியாக உருவாக்கியது-பால்ராஜின் துணைவனாய் நின்று படைப் பிரிவை உருவாக்குவதில் பெரும் பங்காற்றினான் சகல போராளிகளுடனும் அன்புடன் கண்டிப்புடன் கடுமையான பயிற்சிகாலம்.

தமிழீழத்தின் எல்லா இடங்களில் இருந்தும வந்திருந்த போராளிகள்

குடும்பத்தை பிரிந்துவந்தவர்க்கு தாயாக, தந்தையாக, நண்பனாக ஆசானாக.

தமிழேந்தி அண்ணையிடம்நின்றுநின்று தூங்கி சண்டை பிடித்து காசு வாங்கி, இல்லை யென்றால் ஊரில் கடன்வாங்கி அதுவும் முடியாவிட்டால் வீட்டுக்குப் போய் அதை இதைத்தூக்கி தமையன் வியாபாரத்துக்கு வைத்திருக்கும் சாமான்களை அள்ளி வாகனத்தில் ஏற்றி...

எப்படியோ போராளிகளை தனது பிள்ளைகளாய் உயிராய்ப்பார்த்தான், பராமரித்தான்.

வன்னி யுத்தகளம் எங்கள் வன்னிக் காடுகளை எதிரியின் பல்லாயிரம் படைகள் ஊடறுத்து வர முற்பட்ட 'வன்னி' விக்கிரம' பெரும் படைகொண்டு ராஜன் மோத எதிரிப்படை திணறியது சுட்டு வீழ்த்திய ஹெலிக் கொப்டர் துண்டுகளை அள்ளி எடுத்து அனுப்பிய பின்னரும் தொடர்ந்து சண்டை

எல்லாப்பக்கங்களாலும் பூவரசங்குளம் சந்திக்கு வந்து ஏறிய எதிரிகளை எதிர் கொண்டனர் எம் வீரர்கள். கடும் சண்டை ஆகாயத்தை நோக்கி நின்றவைகளும் நிலம் நோக்க சகல ஆயுதங்களையும் ஏந்திய கரங்கள் உறுதியாய் நிற்க ஓடினான் எதிரி.

கொஞ்ச நாள் இடைவெளியில் எதிரியின் இன்னொரு முயற்சி வவுனியாவால் நகர்ந்து தோற்ற எதிரி இம்முறை மன்னார்ப் பக்கமாய்

இம்முறை சண்டை கொஞ்சம் கடுமையாய் . . . எமது வீரர்களை இருபுறமும் சூழ்ந்தபடி எதிரி ராஜனை உணர்ச்சி வசப்படவைக்கும் கடும் சண்டை

எதைப்பற்றியும் யோசிக்காது எதிரியின் முகம் தெரியும் தூரத்தில் நின்று மோதிய ராஜனின் விரல் இல்லாத உள்ளங்கையை உடைத்தபடி ஒரு ரவை, இன்னொருரவை அதே கையில் நடுவில்-

மிக அருகில் எதிரியின் துப்பாக்கி சடசடக்க உறுதியாய் எதிர்த்து நின்றனர் தோழர்கள்.

உள்ள ஆயுதங்கள் எல்லாம்கொண்டு போய் அடிஅடி என்று அடித்து ஆமியைக் கலைத்து விட்டு மயங்கியபடி கிடந்தவனை இழுத்து வந்து சேர்த்தான் ரூபராஜ்

அன்று ராஜன் திரும்பி வந்தது நம்ப முடியாத அதிசயம். அவன் மயங்கி வீழ்ந்து கிடந்த போது எதிரி அருகில் மிக அருகிலேயே நின்றிருந்தான்.

ஆனையிறவுப் பெரும் போர்க்களம் ஓய்வின்றி பம்பரமாய் ராஜன்-

சென்றி நிற்கும் பங்கருக்குள் பசீலன் பொயின்றில் சமையல் கொட்டிலில் சந்தியில் இருந்த மெடிக்ஸ் வீட்டில் எங்கும் நின்றான் எல்லா நேரமும் நின்றான்.

கட்டைக் காட்டில் ஆமியின் கவச வாகனம் நகர்ந்தாலும் ஆர். பி. ஜிக்கு றோமியோ நவம்பர் புல்லாவெளியில் ஆட்டிலறிஷெல் விழுந்து இரண்டு பேர் செத்து ஐந்து பேர் காயம் என்றால் மெடிக்ஸ் வானுக்கு றோமியோ நவம்பர்-

மெடிக்ஸ் வானைப் போக விடாமல் பேலே ஹெலி நின்றால் கலிபர் அனுப்பவும் றோமியோ நவம்பர்.

குணாவின் குறூப்புக்கு அனுப்பிய சாக்குகளுக்கு சாக்கு ஊசி வேண்டும் என்றால் றோமியோ நவம்பர்.

வீரர் வீழ்ந்து - வியூகம் உடைத்து எதிரிப்படை முன்னேறும் வேளையில் தனித்த வீரரை ஒன்றாய்ச் சேர்த்து எதிரியைத் தடுக்கும் வேலைக்கும் றோமியோ நவம்பர்

எல்லாவற்றிற்கும் நின்றான் எல்லாப் பாரத்தையும் தானாய்ச் சுமந்தான்.

எப்படிப்பட்டவனை நாம் இழந்து விட்டோம்.

மறைந்தபோது - அனுபவம் மிக்க போர்த்தளபதியாய் ராஜன் நின்ற போதும் - அவன் யுத்த களத்தில் இருந்து தள்ளியே வைக்கப்பட்டிருந்தான் எங்கள் தலைவனன் பெருங் கனவுகளின் உறைவிடமாக ராஜன் இருந்தான். யாழ்ப்பாணச் சண்டையில் ஈடுபட்டிருந்த குழுக்களுக்கு உணவு விநியோகம் செய்யும் வேலையை அவனிடம் வலிந்து கொடுத்திருந்ததன் காரணம் - அவனை யுத்த களத்தின் முன் முனையிலிருந்து எட்டநிற்க வைப்பதற்கன்றி வேறில்லை.

அனுபவம் மிக்க வீரன் அவனது அனுபவங்கள் மெய்சிலிர்க்கும் கதைகள்.

ஓய்வில்லாக் கடும் உழைப்பாளி அவன் மறையும் போது தலைவரின் பெருங்கனவில் உருவான அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளன். சிறந்த போர் அனுபவங்களை முன்னரே பெற்றிருந்த அவன் இங்கு எல்லா இடமும் இருந்து பொறுக்கி எடுத்த வீரர்களைப் பயிற்றுவித்தான். தன் அனுபவங்களைப் பிழிந்தெடுத்துக் கொடுத்தான்- போர்க்கலை நுட்பங்களை கற்றான், கற்பித்தான் நேர்த்தியான வேலைத்திட்ட ஒழுங்கமைப்பை, கண்டிப்பை, அன்பை, கடும்பயிற்சியை-

வியூகங்கள், விநியோகங்கள் வரைபடம்.. என்று எல்லாவற்றையும் கற்றான் கற்பித்தான்.

ராஜன் அமைதியானவன் தன்செயல்களினால் மட்டும் தன்னை அடையாளம் காட்டியவன் - ஆம் செயல்களினால் மட்டும்.

எந்த வேலையாக இருந்தாலும் ராஜன் அதிகம் பேசுபவனல்ல ஏதாவது இராணுவத்திட்டம் தீட்டப்படும்சந்தர்ப்பத்தில், பேசாது பார்த்தபடி - கேட்டபடி இருக்கும் ராஜன், திட்டம் தீட்டப்படுவது பூர்த்தியாவதற்கு முன்னுள்ள இடைவெளியில் பேசுவான் குறிப்பிட்ட திட்டம் செயல் வடிவம் பெறும் போது அவனது யுக்தியின் பெறுமதி தெரியும்.

தனது கடமையை பூரணமாகச் செய்வதில் தன்னை வெளிப்படுத்துவான் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்யைய ஒருவரைக் குறை சொல்வதைக் காண்பதரிது 'கடமையைச் செய்,பயனை எதிர்பாராதே' என்பதற்கு உதாரணமான கர்ம வீரனாய் விளங்கினான்

அவனது வரலாறு முழுமையாக எழுதப்பட்டால், அது பெரும் காவியமாகும். இராணுவ வல்லுனர்களால் மட்டுமல்ல மருத்துவ வல்லுனர்களாலும் நம்பமுடியாத அதிசயமாய் அவன் வரலாறு திகழும்

எண்ணற்ற தாக்குதல்கள்; எண்ணற்றதோழர்கள்; அவன் செய்தவைகள், அவன் பெற்ற அனுபவங்கள் எண்ணி முடியாதவை எழுத்தில் அடங்காதவை அவற்றின் கதை சொல்ல, சில தோழர்களும் பல ஆயுதங்களும், இன்னும் விடுதலைப் போரில் . . .

அதுமட்டுமல்ல, எங்கள் மக்களும் தமிழீழ மண்ணும், மரம் செடி கொடிகளும் அவனைச் சொல்லும் அந்த உறுதியின் உறைவிடம் உலாவிய பூமி எங்களது என்பதைத் தமிழீழம் தலைநிமிர்ந்து சொல்லும்.

-பொட்டு

நன்றி! விடுதலைப்புலிகள்

ஈழநாதம்

# அ.தி.மு.கவின் மக்கள் விரோதபோக்கு கட்டுப்படுத்த திரண்டெழுக

## -இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு தமிழ் நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டுமென இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவு அறைகூவல் விடுத்துள்ளது.

தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய அரசின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதற்கான இயக்கம் ஒன்றை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி ஆரம்பித்துள்ளது

ஒருவருட கால ஜெயலலிதா அரசாங்கம் பல எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்த மக்களை ஏமாற்றி துரோகமிழைத்துள்ளது. அதிகாரத்தில் அமர்த்திய மக்களை அரசு கைவிட்டுவிட்டது என கட்சியின் மாநில பிரிவு செயலர் ஏ. நல்லசிவம் குறிப்பிட்டுள்ளார்.

### அயல் நாடுகளுடன்

## கூட்டுக் கடற்படை பயிற்சி இந்தியா விருப்பம்

வங்கக் கடலில் கூட்டாக கடற்படை பயிற்சிகளை நடாத்த இந்தியா முயற்சித்து வருவதாக தெரிய வருகிறது இதற்காக அயல்நாட்டு கடற்படைகளுக்கு இப் பயிற்சியில் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்க இந்தியா ஆயத்தமாகி வருகிறது.

நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற இந்துமா கடல் குறித்த சர்வதேச இரண்டு நாள் கருத்தரங்கில் உரையாற்றிய இந்திய கடற்படைத் தலைவர் அட்மிரல் எல். ராம்தாஸ் மேற்படி விடயத்தை வெளியிட்டார்.

## அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)


'' மழைக்காடுகள் '' என்ற தலைப்பிலான அறிவியல் கருத்தரங்கு இன்று மாலை 3 30 மணியளவில் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் நடுவகப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இதில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கைது

(மூதூர்)

மூதூரில் றிசேவ் பொலிஸ் படையைச் சேர்ந்த ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வெடிக்க வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் டெட்டனேட்டர்கள் மற்றும் டோர்ச் பற்றரிகள் போன்றவற்றைக் கடத்திச் செல்வதற்கு உதவியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.




### யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே

## கோட்ட மட்டத்திலான இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்றையஉதைபந்தாட்டப் போட்டிகளின் விபரம் வருமாறு:

வடமராட்சிக் கல்விக்கோட்டத்தில் யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3 00 மணிக்கு 19 வயதுப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி எதிர் பொன்னம்பலம் வித்தியாலயம்- பிற்பகல் 4.15 மணிக்கு 17 வயது பீ பிரிவில் ஸ்ரீநாரதா வித்தியாலயம் எதிர் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை. டயமன் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு 17 வயது பீ பிரிவில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் பொன்னம்பலம்வித்தியாலயம் பிற்பகல் 4 15 மணிக்கு 19 வயது பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் கொக்குவில் இந்து மைதானத்தில் பிற்பகல் 3 00 மணிக்கு 17 வயது பிரிவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி. பிற்பகல் 4.00மணிக்கு 17 வயது பிரிவில் அருணோதயக் கல்லூரி எதிர் விக்ரோறியா கல்லூரி. மாலை 5.00 மணிக்கு 19 வயது பிரிவில் மகாஜனக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

யாழ். கல்விக்கோட்டத்தில் பரியோவான் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 15 மணிக்கு 17 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டம் பிற்பகல் 4.30 மணிக்கு 19 வயது பிரிவில் கனகரட்ணம் மத்தியமகா வித்தியாலயம் எதிர் மத்திய கல்லூரி.

பதவியா சென்று பதுங்கிக் கொண்டனர், இம்முகாமிலிருந்து ஆட்லறி செல்தாக்குதலும் இடம்பெற்றது, அத்தோடு கைப்பற்றப்பட்ட மீனி முகாமிற்கு ஒரு மைல் தொலைவில் மாமடுப் பக்கமாகவும் இராணுவ முகாமொன்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வசாவிளான்

நேற்று முன்தினம் இரவு பத்து மணிமுதல் இப்பகுதியில் இருந்து தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகமும் கலிபர் தாக்குதல்களும் இடம் பெற்றுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் பலாலிமுகாமிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மேற்படிதாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

நேற்று மாலை 4 15 மணியளவில் இப்பகுதிகளில் தொடர்ந்து துப்பாக்கி பிரயோகச் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. (ச)

வைத்திய

தியசாலை, மற்றும் ஏனைய தரத்திலான அரச மருத்துவ மனைகள் உட்பட யாழ் போதனா மருத்துவமனை ஆகியவற்றில் சில மருந்துப் பொருள்கள் முற்றாக தீர்ந்து விட்டது சில வகை மருந்துப் பொருள்கள் தீர்ந்து விடும் நிலையில் உள்ளது

ஈர்ப்புவலி, குக்கல், தொண்டைக்காப்பன், அம்மை, பொக்

## மதிய உணவு முத்திரைகளை உடன் பெற்றுக் கொள்க

(யாழ்ப்பாணம்)

பாடசாலைப் பிள்ளைகளிற்கான அனைத்து இலவச மதிய உணவு முத்திரைகளும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் செயலகங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவற்றை உரிய பாடசாலைகள் இம் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று மாணவர்களிற்கு விநியோகிக்கும் படியும் யாழ் செயலக சமூக சேவைப்பகுதி அறிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இதுவரை மாணவர்மதிய உணவு முத்திரை சம்பந்தமான கணக்கு விபரங்களை யாழ் செயலக சமூகசேவைப் பிரிவில் சமர்ப்பித்த பாடசாலைகளுக்கே மேற்படி மதிய உணவு முத்திரைகள் வழங்கப் பட உள்ளன.

இப் பாடசாலைகளிற்கு 91 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதத்திற்கான உணவு முத்திரைகளும் 92 ஆம் ஆண்டின் ஏப்ரல், மே, யூன், யூலை ஓகஸ்ட, செப்ரெம்பர் ஆகிய மாதங்களிற்கான உணவு முத்திரைகளும் அனுப்பி வைக்கப் பட்டன. (பா)

### வாணிபம், தொழில் முயற்சிகளைப் பதிவு செய்தல்

## கால அட்டவணை

| வாணிபம்/தொழில தன்மை | நலலூர் உ.அ அ.பி | கோப்பாய் உ.அ.அ.பி | மானிபபாய் உ அ.அ.பி |
|---|---|---|---|
| 1. பவுண், பொன், வெள்ளி நகை வாணிபம் நகை உற்பத்தித்தொழில், அடைவு கடை | 03-10-92- 06-10-92 வரை | 10-10-92- 14-10 92 வரை | 15-10-92- 18-10-92 வரை |
| 2. பலசரக்குவாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 3. புடைவை வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 4. கட்டடப் பொருட்கள்/மின்சார உபகரணங்கள்/மோட்டார் உதிரிப்பாக வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |

யாழ். மாநகராட்சி மன்றம்

சேற்று சப்பாத்துக்கான கூறுவிலை

யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர்களின் பாவனைக்குகந்த 8'', 9'', 10'' அளவிலுள்ள சேற்றுச் சப்பாத்துகள் (Gum Boots) தேவைப்படுகின்றன. அவற்றை உடன் விநியோகிக்க விரும்புவோர் அவற்றின் விலையினை எதிர்வரும் 07-10-92 க்கு முன்னர் எழுத்துமூலம் எமக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

## மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள்

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகளின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

யாழ். மருத்துவபீட மைதா... மெமோறியல் ஆங்கில பாடசாலை எதிர் விக்கினேஸ்வரா கல்லூரியும். ஹாட்லீ கல்லூரி எதிர் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் பங்குபற்றவுள்ளன.

# யாழ். மாநகராட்சி மன்றம்

## சேற்று சப்பாத்துக்கான கூறுவிலை

யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர்களின் பாவனைக்குகந்த 8'', 9'', 10'' அளவிலுள்ள சேற்றுச் சப்பாத்துகள் (Gum Boots) தேவைப்படுகின்றன. அவற்றை உடன் விநியோகிக்க விரும்புவோர் அவற்றின் விலையினை எதிர்வரும் 07-10-92 க்கு முன்னர் எழுத்துமூலம் எமக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
29-09-1992.
(சி. 5754)

---

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

1-ம் ஆண்டு நினைவு | 31-ம் நாள் நினைவு





திரு. ச. சாமிநாதன் (தங்கா)

திருமதி பிரகாசபுத்திரி சாமிநாதன் [பேபிறோஸ்]

அன்னை மடியில் 03-09-1942
ஆண்டவனடியில் 14-10-1991

அன்னை மடியில் 27-07-1949
ஆண்டவனடியில் 02-09-1992

பிறந்த வீட்டிற்கு ஒருமகளாய்
குறைவைக்கா மூவர் சகோதரராய் - கண்
நிறைந்த கணவனை பிரிந்து - பின்னும்
மனம் நிறைந்த பிள்ளைகளை நீ பிரிந்து - கணவன்
பிறந்த நாளிலே அவனுடன் சேர்ந்தனையோ!

19/6, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-5151]

தாய், பிள்ளைகள் (யோதினி, விஜினி), சகோதரர்கள், மச்சாள், உற்றார், உறவினர்.

---

பிற்பகல் 3 00 மணிக்கு 19 வயதுப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி எதிர் பொன்னம்பலம் வித்தியாலயம்- பிற்பகல் 4.15 மணிக்கு 17 வயது பீ பிரிவில் ஸ்ரீநாரதா வித்தியாலயம் எதிர் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை. டயமன் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு 17 வயது பீ பிரிவில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் பொன்னம்பலம்வித்தியாலயம் பிற்பகல் 4 15 மணிக்கு 19 வயது பிரிவில் அருணோதயக் கல்லூரி எதிர் விக்ரோறியா கல்லூரி. மாலை 5. 00 மணிக்கு 19 வயது பிரிவில் மகாஜனக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

யாழ். கல்விக்கோட்டத்தில் பரியோவான் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 15 மணிக்கு 17 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டம் பிற்பகல் 4.30 மணிக்கு 19 வயது பிரிவில் கனகரட்ணம் மத்தியமகா வித்தியாலயம் எதிர் மத்திய கல்லூரி.

## மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள்

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகளின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

யாழ். மருத்துவபீட மைதானத்தில் ஆண்களுக்கான போட்டிகளில் மாலை 3-00 மணிக்கு உதைபந்தாட்டம் நடைபெறவுள்ளது. இதில் விக்கினேஸ்வரா கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயா கல்லூரியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து புங்குடுதீவு மகாவித்தியாலயமும் மோதும். மாலை 5-00 மணிக்கு கயிறிழுத்தல் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை எதிர் விக்கினேஸ்வரா கல்லூரியும், ஹாட்லீ கல்லூரி எதிர் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் பங்குபற்றவுள்ளன.

பெண்களுக்கான போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியில் முற்பகல் 9-00 மணிக்கு ஆரம்பமாகும். 10-15 மணிக்கு கயிறிழுத்தல் போட்டியில் ஞானசாரியர் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை கொத்தணி, புனித ஜோஸ் மகாவித்தியாலயம் எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை என்பன பங்குபற்றவுள்ளன.

---

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

## ஐந்தாவது மாநாடு 3 ஆம் திகதி ஆரம்பம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஐந்தாவது மாநாடு நாளை மூன்றாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதிவரை ஆஸ்திரேலியாவின் சிட்னிநகரில் நடைபெற உள்ளதுனஇயக்க இலங்கைக் கிளையின் இணைச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்

இயக்கத்தின் தலைமைச் செயலகத் தலைவர் திரு. இர. ந வீரப்பன் தலைமையில் இம் மாநாடு நடைபெறும் எனவும் இலங்கைக் கிளையிலிருந்து மாநாட்டுக்கு சில பேராளர்கள் சென்றுள்ளனரென அவர் கூறியுள்ளார். (24)

---

சிறிலங்கா

அழைத்துச் செல்லப்பட்டனர்

ஜனாதிபதி மாளிகையின் பிரதான வாயிலை சிறிலங்கா ஜனாதிபதி சென்றடைந்ததும் குதிரைகள் மீது அமர்ந்திருந்த இந்திய ஜனாதிபதியின் காவற்படையினர் வரவேற்றனர் அங்கு முப்படையினரதும் அணிவகுப்பு மரியாதை இடம் பெற்றது.

பிறேமாவை

னத்தை விட்டு இறங்காமல் விமானத்திலேயே ஓய்வெடுத்தார். பின்னர் அவர் வந்த விமானம் புதுடில்லிக்குப் புறப்படுச் சென்றது

சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த போது தமிழ்நாடு விமான நிலையத்தில் வைத்து அப்போதைய தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி வரவேற்றமை குறிப்பிடத்தக்கது இதே வேளை தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிமான நிலையத்திறகு செல்லவில்லை என தெரிவிக்கப்படுகிறது

---

## தவறிவிட்டது

கோப்பாய் றோட் உரும்பராய் வீதியில் இருக்கும் ராஜா பலசரக்கு மாளிகைக்கும் புனித மிக்கேல் கோயிலுக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று (27-09-1992) அன்று தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் ராஜா பலசரக்கு மாளிகை அல்லது 209 ஆஸ்பத்திரி வீதியில் உள்ள றொபேட் என்பவரிடம் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

[3303]

---

இராணுவத்தினர் பலாலிமுகாமிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மேற்படி தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

நேற்று மாலை 4. 15 மணியளவில் இப்பகுதிகளில் தொடர்ந்து துப்பாக்கி பிரயோகச் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. (ச)

---

வைத்திய

தியசாலை, மற்றும் ஏனைய தரத்திலான அரச மருத்துவமனைகள் உட்பட யாழ் போதனா மருத்துவமனை ஆகியவற்றில் சில மருந்துப் பொருள்கள் முற்றாக தீர்ந்து விட்டது சில வகை மருந்துப் பொருள்கள் தீர்ந்து விடும் நிலையில் உள்ளது

ஈர்ப்புவலி, குக்கல், தொண்டைக்கரப்பன் அம்மை, பொக்குளிப்பான், இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்களுக்கான நோய்த் தடுப்பு ஊசி மருந்து வகைகள் முற்றாகத் தீர்ந்து விட்டன இவற்றைவிட காயங்களுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் வலிகுறைக்கும் மருந்துப் பொருள்கள் ஆகியனவும் தீர்ந்துவிடும் நிலையில் உள்ளது மேற்படி மருத்துவமனைகளுக்குச் செல்லும் வெளி நோயாளர்களிற்கு வேண்டிய மருந்துப் பொருள்களில் பல வகையானவை வழங்கப்படுவதில்லை பதிலாக சில மருந்துப் பொருள்களின் பெயர்கள் எழுதப்பட்ட ''துண்டு'' கொடுக்கும் செயல் வழக்கமாகி விட்டது.

இவ்வாறான நிலைமை குறித்து சம்மந்தப்பட்ட வைத்திய அதிகாரிகளிடம் வினவிய போது தாம் கேட்கும் அளவில் தமக்கு மருந்துப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்று கூறிவருகின்றனர்.

அரசு வடபகுதிக்கு அனுப்பி வைக்கும் மருந்துப் பொருள்கள் குறித்து கருத்து வெளியிட்ட அரச சார்பற்ற நிறுவன அதிகாரி ஒருவர் ''ஆனைப் பசிக்கு அரிசிப் பொரி'' என்று வர்ணித்தார்.

இந்த நிலை தொடர்ந்தும் நீடித்தால் பருவ மழை ஆரம்பித்துள்ளதால் நோயாளிகள் தொகையும் அதிகரிக்கும் இதனால் மருந்துப் பொருள்களுக்கான நெருக்கடி மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

---

வடமராட்சிக்

பிடிக்கச் சென்ற மூவரைக் காணவில்லை என்றும் அவர்கள் சென்ற மீன்பிடி வள்ளம் கடலில் அனாதரவாக நிற்க ஏனைய மீனவர்களினால் மீட்கப்பட்டதாகவும் புகார் செய்யப்படுகிறது. இம்மீனவர்களை சிறீலங்கா கடற்படையினர் கைது செய்துள்ளார்கள் எனப் பேசிக்கொள்ளப்பட்டது இம் மீனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (25)

---

யாழ் குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இதுவரை மாணவர்மதிய மாதங்களிற்கான உணவு முத்திரைகளும் அனுப்பி வைக்கப்பட்டன. (பா)

---

## வாணிபம், தொழில் முயற்சிகளைப் பதிவு செய்தல்

## கால அட்டவணை

| வாணிபம்/தொழில தன்மை | நலலூர் உ. அ அ.பி | கோப்பாய் உ. அ. அ.பி | மானிபபாய் உ அ. அ.பி |
|---|---|---|---|
| 1. பவுண், பொன், வெள்ளி நகை வாணிபம் நகை உற்பத்தித்தொழில், அடைவு கடை | 03-10-92- 06-10-92 வரை | 10-10-92- 14-10 92 வரை | 15-10-92- 18-10-92 வரை |
| 2. பலசரக்குவாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 3. புடைவை வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 4. கட்டடப்பொருட்கள்/மின்சார உபகரணங்கள்/மோட்டார் உதிரிப்பாக வாணிபம் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 5. விடுதிகள்/மதுபானச் சாலை/தேநீர்ச் சாலை | 07-10-92- 09-10-92 வரை | ,, ,, ,, ,, | 19-10-92- 22-10-92 வரை |
| 6. தொழில் நிறுவனங்கள் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 7. உயர் தொழில் கண்ணியத்தொழில் | ,, ,, | ,, ,, | ,, ,, |
| 8. ஏனையவை | ,, ,, | ,, ,, | ,, ,, |

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

---

## கிணற்றில் தவறி வீழ்ந்து முதியவர் மரணம்

(பருத்தித்துறை)

இரவு வேளையில் கிணற்றில் நீர் அள்ளச் சென்ற வயோதிபரான மு. மாணிக்கம் (துன்னாலை வடக்கு) தவறி கிணற்றுள் வீழ்ந்து பலியானார்.

கிணற்றுள் வீழ்ந்த இந்த வயோதிபர் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மரணமானார். (25)

## போலியோ தடுப்பூசி

(கொழும்புத்துறை)

பாஷையூர் கிராமத்தில் நாளை சனிக்கிழமை காலை சிறுவர்களுக்கான போலியோ தடுப்பூசி மருந்து இலவசமாக யாழ். றோட்டரக்ட் கழகத்தினரால் ஏற்றப்படவுள்ளது.

தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைக் கொண்டுவந்து போலியோ தடுப்பூசி மருந்தை ஏற்றிச் செல்லுமாறு கழகச் செயலாளர் திரு அம்பிகை டிவகலாலா தெரிவித்துள்ளார். [24]

---

### பற்றிக்ஸ் கல்லூரி ஆங்கில தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித பற்றிக்ஸ் கல்லூரி ஆங்கிலதினவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

ஏ ஜே. கனகரெட்ணா இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். இவர் இக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், மாணவருமாவார். கல்லூரி அதிபர் வண. ஏ.கே. பேணாட் தலைமையில் விழா நடைபெறும்.

---

## பொலிசாரின் முயற்சி தோல்வி

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரேமதாசா உடுகம்பொலவைப் பிடிக்கப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை.

உடுகம்பொலவைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள சாதாரண உடையில் உள்ள பொலிஸார் இம்மாதம் மூன்று வீடுகளை முற்றுகையிட்டுத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதில் ஒரு வீடு தெண்பகுதியில் உள்ளது. மூன்று இடங்களிலும் இவர்கள் முயற்சி கைகூடவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

---

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அகடோபர் மாதம் 02 ஆம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது